விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 கார்த்திகை 24 ஸபர் 23 இதழ் 300
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 10—12—82

## துப்பாக்கி இளைஞர்களால் சில்லாலையில் பஸ் தீயிடப்பட்டது!

[மாவிட்டபுரம்]
காங்கேசன்துறை பொலிஸ்பகுதியைச்சேர்ந்த சில்லாலையில் வைத்து வட பிராந்திய போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று நேற்று முன்தினமிரவு துப்பாக்கி சகிதமான இளைஞர் கோஷ்டியினால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. இது பற்றி கூறப்படுவதாவது:-

''யாழ்ப்பாணம்சில்லாலை சேவையில் ஈடுபட்டிருந்த 791ம் இலக்கபஸ்ஸே நேற்று முன்தினமிரவு பத்தரை மணியளவில் சில்லாலை புகையிலைச் சங்கம்முன்பாக வைத்து தீயிடப்பட்டது. இங்குதான் வழக்கமாக இரவு சேவைமுடிந்த பின்னர் பஸ்ஸை நிற்பாட்டுவது வழக்கம்.

நேற்று முன்தினமிரவு பத்தரை மணியளவில் துப்பாக்கி சகிதம் ஆறு இளைஞர்கள் இங்குவந்து சேர்ந்தனர். பஸ் சாரதி எஸ். இராசரத்தினம், கண்டக்டர் ஏ. இராசநாயகம்ஆகியோரை நான்கு இளைஞர்கள் துப்பாக்கி சகிதம் சிறிது தூரத்திற்கு கடத்திச்சென்று கொண்டிருக்க, ஏனையோர் சைக்கிள் ரயர்களையும் போட்டு, எண்ணெய்யையும் ஊற்றி பஸ்ஸிற்கு தீவைத்தனர். பஸ் எரியத் தொடங்கிய சில நிமிடங்களில் இளைஞர்கள் அவ்விடத்திலிருந்து சென்றுவிட்டார்

(8-ம் பக்கம் பார்க்க)

## இன்று விசாரணை

[கொழும்பு]
வட்டுக்கோட்டை எம். பி. யாக நியமிக்கப்பட்ட குட்டிமணியை, சத்தியப்பிரமாணம் செய்ய பாராளுமன்றத்திற்கு ஏன் அழைத்துச்செல்லக்கூடாதென்பதற்கு காரணம் காட்டுமாறு அப்பீல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு இன்று விசாரணைக்கு எடுக்கப்படும். சட்டமா அதிபரையும் சிறைச்சாலை ஆணையாளரையும் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கடந்ததவணையின்போது பணிக்கப்பட்டிருந்தது. [க]

# "கிறிஸ்மஸ் தினத்தில் ஆடம்பரம் வேண்டாம்!"

## கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள கோரிக்கை

[யாழ்ப்பாணம்]
கிறிஸ்மஸ் விழாவை இம்முறை ஆடம்பரமின்றிக் கொண்டாட வேண்டும் என்று யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு.சி. வின்சென்ட் வேண்கோள் விடுத்துள்ளார்.

கத்தோலிக்க ஆசிரியர் சங்கக்கிளைகளுக்கு அவர் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில், மதகுருக்கள், விரிவுரையாளர்கள், பெண்கள், இளைஞர்கள், போன்ற பலவகைப்பட்டோர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் இராணுவ முகாம்களில் இன்னல்படும்வேளையில் கிறிஸ்மஸ் விழாவை ஆடம்பரமாக கொண்டாடவேண்டுமா? எனக் கேட்டுள்ளார்.

ஆடம்பரங்களை அகற்றி, வாழ்த்து மடல் அனுப்புவதை நிறுத்தி, பட்டாசுகளை வெடிக்காது, புத்தாடை தரிக்காது சோகமயமான கிறிஸ்மஸ் விழாவாக 1982-ம் ஆண்டின் கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடும்படி அறிக்கையில் கோரியுள்ளார்.

1960ம் ஆண்டு நடைபெற்ற கிறிஸ்மஸ் விழா எவ்வாறு சோகமே உருவானதாய் அமைந்திருந்ததோ, அவ்வாறு இம்முறையும் அமைய அறிவாற்றல் படைத்தோர் வழிகாட்டிகளாய் விளங்குவார்களாக என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வேண்டுகோள்

நத்தாரில் வாழ்த்து மடல்கள் அனுப்பவேண்டாம் என்றும், வெடி, வாணங்கள் கொழுத்தவேண்டாம் என்றும் 'மனித உரிமை குரல்' திரு. பி. யேசுதாசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நமது அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கும்போது, பயங்கரவாததடைச் சட்டத்தினால் நாம் ஒடுக்கப்படும்போது, தமிழ் மக்களாகிய நமக்கு நத்தார் பண்டிகை குதூகலம் வேண்டுமா? என்றும் பிரசுரம் மூலம் அவர் கேட்டுள்ளார். [கர-நி]

## மின்வெட்டு; சுதந்திரகட்சிபுகார்

[கொழும்பு]
சர்வஜனவாக்கெடுப்பை எதிர்த்து திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தொலைக்காட்சி உரை நிகழ்த்திய நேரத்தில் கொழும்பை சுற்றியுள்ள பல பகுதிகளில் திட்டமிட்டு மின்வெட்டு நடந்துள்ளதாக சுதந்திரக்கட்சியினர், மின்சாரசபை அத்தியட்சகருக்கு புகார் செய்துள்ளனர். [இ]

## கோண்டாவில் மரணம் கொலையென தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)
கோண்டாவில் மார்க்கண்டு தம்பதிகளின் மரணம் தொடர்பாக மரணவிசாரணை நடத்திய யாழ். நீதவான் திரு. எஸ். அமிர்தலிங்கம் கொலையெனத் தீர்ப்பளித்தார்.

துப்பாக்கிச் சூட்டினாலும், அதிர்ச்சியினாலும் ஏற்பட்ட இரத்தப் பெருக்கினாலும், மரணம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [க]

## வடபகுதி ஆசிரியர்களின் சம்பளத்தை காசோலையாக வழங்குவதற்கு எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)
வடபகுதி பாடசாலை ஆசிரியர்கள் ஊழியர்கள் சம்பளப் பணத்தைக் காசோலையாக வழங்குவதற்கு எடுக்கப்பட்டு வரும் முயற்சிக்கு இலங்கை தமிழர் ஆசிரியர்சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கபொதுச்செயலாளர் திரு த மகாசிவம், யாழ். மாவட்ட தலைவர் திரு. த காசிநாதன், யாழ். மாவட்டச் செயலாளர் திரு. வி. எஸ். சிவபாலசிங்கம்

(8-ம் பக்கம் பார்க்க)

## 'தேவன் கைவைக்காததுறை எதுவுமே இல்லை - யாழ். எம் பி.

(சுண்டிக்குளி)
''பல்துறைவிற்பன்னனை நாம் இழந்துவிட்டோம். சமூக வழிகாட்டியாகத் 'தேவன்' விளங்கியவர். அவர் கைவைக்காததுறை எதுவுமேயில்லை சிறந்த ஆசிரியராக, நாடகாசிரியராக, எழுத்தாளனாக, நண்பராக, ஆலோசகராக விளங்கியவர் 'தேவன்'. அவரின் இழப்பு நமக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்''

இவ்வாறு எழுத்தாளர் 'தேவனின் இறுதிச் சடங்கின்போது யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் அஞ்சலி செலுத்திப் பேசுகையில் குறிப்

[8-ம் பக்கம் பார்க்க]

உ

திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் துந்துபி வருடம் கார்த்திகை மாதம் 26-ம் நாள் (11-12-1982) சனிக்கிழமை பகல்11-15மணி தொடக்கம் 12-20க்குள்ளாக வரும் கும்ப லக்கின சுபவேளையில்

| | |
|---|---|
| எமது ஏக புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>விஜயகுமார்<br>(ஆசிரியர்)<br>அவர்களுக்கும் | எமது புத்திரி<br>திருநிறை செல்வி<br>அருணாதேவி<br>(ஆசிரியை)<br>அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு, நல்லூர் சிவன்கோவிலில் நடைபெற இருக்கும் திருமாங்கல்ய தாரண வைபவத்தில் தாங்கள்தங்கள் குடும்ப சமேதரராய் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| வி. நீலகண்டனும்<br>பாரியாரும்<br>(உதவி அரசாங்க அதிபர்)<br>தெணி றேட்,<br>பருத்தித்துறை. | ஆ. துரைராஜசிங்கமும்<br>பாரியாரும்<br>(சமாதான நீதிபதியும், யாழ். மாநகரசபை உறுப்பினரும்)<br>141, பருத்தித்துறை வீதி,<br>நல்லூர். |

5428

## யாழ். ஆஸ்பத்திரி: 4 மாடிக் கட்டடம்: நாளை அடிக்கல் நாட்டப்படும்

(யாழ்ப்பாணம்)
யாழ். ஆஸ்பத்திரி வளவில் இரண்டரைக் கோடி ரூபா செலவில் யாழ், மாவட்ட அபிவிருத்திச் சபையினால் கட்டப்படவிருக்கும் நான்கு மாடி கட்டடத்தை யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு சு. நடராசா நாளை சனிக்கிழமை முற்பகல் அடிக்கல் நாட்டிவைப்பார்.

இந்த ஆஸ்பத்திரிக் கட்டிட வேலைகளுக்கு மூன்று கட்டங்

[8-ம் பக்கம் பார்க்க]

## உயர்வகுப்பு மாணவன் தற்கொலை

(யாழ்ப்பாணம்)
தயார் படிக்கும்படி வற்புறுத்தியதைத் தொடர்ந்து கோண்டாவிலைச் சேர்ந்த வி. சந்திரசேகரம் என்ற உயர் வகுப்பு மாணவன் கடிதம் ஒன்று எழுதிவைத்துவிட்டு, தற்கொலை செய்துகொண்டார்.

யாழ். பதில் நீதவான் திரு. எஸ். அமிர்தலிங்கம் மரண விசாரணை நடத்தியபின் தற்கொலைஎனத் தீர்ப்பளித்தார். [க]

## காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை மூன்றும் கட்ட வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன

### என்ஜினியர்கள் வெளிநடப்பு

[ஏ. வி. மாணிக்கம்]
காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை மூன்றும கட்ட வேலைகள் பாதிப்படைந்துள்ளன.

இக்கட்டத்தில் வேலைசெய்யும் மின்சாரத்துறை என்ஜினியர்கள் வெளிநடப்புச் செய்துள்ளதால், இந்தக் கட்டத்தில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது.

எட்டு மின்சாரத்துறை என்ஜினியர்கள் நிர்வாகத்துடன் ஏற்பட்ட பிரச்னை காரணமாக வெளிநடப்புச் செய்துள்ளனர்.

மூன்றும் கட்டத்தில் வேலைகள் இப்போது வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வேலைகள் தொடர்ந்து நடைபெறுதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நிர்வாகத்துடன் தமக்குத் தொடர்ந்து வேலைசெய்யமுடியாதிருப்பதாகவும், தமது சம்பளம் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் வெளிநடப்புச்செய்துள்ள என்ஜினியர்கள் தெரிவித்தனர்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

EL 4122 ஒஸ்ரின் டெவன் மொடல் வான் (சொந்தப் பாவிப்பிலுள்ளது) விற்பனைக்குண்டு. தொடர்பு; திருமதி ரி. வி. ஜி. பெர்ணண்டோ, இல. 18, மேல் இந்திபெத்த, மொறட்டுவ. (5407)

ஊரெழு பலாலி றோட்டிலிருந்து 100 யார் தூரத்தில் கரந்தன் றோட்டுக்கு அண்மையில் 17 பரப்பு தோட்ட நிலம் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி, சபாபதி இராசதுரை பிள்ளையார் கோவில் கிழக்கு ஒழுங்கை, ஊரெழு. 5400

சகல வசதியும் அமைந்த வீடும், காணியும் விற்பனைக்கு உண்டு. யோகராசா "கனகவாசா" சேச் லேன், கூளாவடி ஆனைக்கோட்டை உப தபாற் கந்தோருக்கு அருகாமையில். 5193

## தேவை

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்கு எழுதுவினைஞர் ஒருவர் தேவை ஆங்கில அறிவுடன் கூடிய ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர் அல்லது ஆசிரியர் விரும்பத்தக்கது. சொந்தக் கையெழுத்தில் நற்சாட்சிப் பத்திரத்துடன் விண்ணப்பிக்கவும்: செயலாளர், சைவ பரிபாலன சபை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 5359

கிறைண்டிங் மில்லில் வேலை செய்வதற்கு ஆண்களும், தேவன்ஸ் சியாக்காய் பவுடர் பறபொடி பைக்கற் செய்வதற்கு பெண்பிள்ளைகளும் தேவை. தேவன்ஸ் மில், 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5423

## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணக் கச்சேரியில் 01-01-1983 முதல் ஒரு வருட காலத்திற்கு சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கான கேள்விப்பத்திரங்கள் 17-12-1982 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணி வரை யாழ் செயலக நலன் புரிச்சங்கப் பொதுச் செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளப் பெறமுடியாத வைப்புப்பணமாக ரூபா 10/- செலுத்தி விண்ணப்பப்படிவங்களை செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை சங்கச் செயலாளரிடம் அலுவலக நேரங்களில் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

இ. திருநாவுக்கரசு
கௌரவ பொதுச் செயலாளர்,
யாழ் செயலக நலன்புரிச் சங்கம்.
5421

## பெயர் மாற்றம்

நெல்லியடி காளையந் தோட்டத்தைச் சேர்ந்த செல்வி சேகுதாவுது கண்மணி ஆகிய நான் 7-12-82ம் திகதி முதல் எனது பெயரை சேகுதாவுது அஸ்மியா பானு என்று மாற்றிக் கொண்டேன் எனவும் அவ்வண்ணமே சகல ஆவணங்களிலும் கையொப்பமிடுவேன் எனவும் ஸ்ரீலங்கா குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத் தருகின்றேன்.

சே. அஸ்மியாபானு
5420

## வல்வையில் சமாதானக்குழு

(புலோலி)

வல்வை வடக்கு கிராமோதய சபை ஓய்வு பெற்ற நீதவான் நீதிமன்ற முதலியார் திரு. என். பாலசுப்பிரமணியம் தலைமையில் சமாதானக்குழு ஒன்றைத் தெரிவு செய்துள்ளது.

திரு. த. சுந்தரலிங்கம் திரு. எஸ். சிவானந்தம், திரு. எம். சங்கரகாந்தலிங்கம் ஆகியோர் இச்சமாதானக் குழுவின் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இச்சமாதானக் குழு தற்போது காட்டுவளவு அணைக்கட்டு விடயமாகவும், ஆதிகோவிலடி ஐஸ்வாடி அமைத்தல் சம்பந்தமாகவும் எழுந்துள்ள பிரச்னைகளை ஆராய்ந்து தீர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

# உடும்பு வேட்டைக்குச் சென்ற இளைஞர் துவக்குசூட்டுக்குபலி

(வவனியா)

உடும்பு வேட்டைக்குசென்ற இளைஞன் கொண்டுசென்ற துப்பாக்கி வெடித்ததினால் ஒருவர் பலியானார். மரணவிசாரணையின்பின் விபத்து மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டது.

இச்சம்பவம் வவனியா பொலிஸ்பிரிவிலுள்ள கோதண்டர் நொச்சிக்குளத்தில் நிகழ்ந்துள்ளது.

22 வயதுடைய நாகலிங்கம் இராசரத்தினம் என்ற இளைஞனே இவ்வாறு பலியாகியுள்ளார்.

மரணவிசாரணையை வவனியா—கோழியாகுளம் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு கனகசபை அமிர்தலிங்கம் நடத்தினர்.

விசாரணையின்போது தெரிய வந்ததாவது சம்பவதினம் இறந்தவர் தனது நண்பர்களுடன் உடும்புவேட்டைக்கு தமது அண்ணனுடைய அனுமதியுள்ள துப்பாக்கியை எடுத்துச் சென்றாராம்.

காட்டினுள் உடும்பு ஒன்று மரத்தில் ஏறியபோது துவக்கினுள் தோட்டாக்களை போட்டு நிரப்பி 'வில்' இழுத்த நிலையில் வைத்துக்கொண்டு, துப்பாக்கியின் குழல்பகுதியை பிடித்துக்கொண்டு மறுபக்கத்தினால் பற்றை ஒன்றில் அடித்தாராம் அச்சமயம் துப்பாக்கி வெடித்து இளைஞனின் நெஞ்சில் குண்டுகள் பாய்ந்ததாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடனடியாக காயமடைந்தவர் வவனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் வழியில் மரணமாகியுள்ளார்.

பிரேத பரிசோதனையினை வவனியா மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். நிரஞ்சன் மேற்கொண்டார்.

இறுதியில் விபத்து மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

சிங்கப்பூர்/மலேசியாவில் வேலையாட்கள்
**Diggers உடனடியாகத் தேவை**
DIGGERS: ஆழக்கிணறு, ஆழக் குழிகள் அமைக்கும் வேலைகளுக்கு
அனுபவம் வாய்ந்தவர்கள் தேவை
பாஸ்போட், தொழில் அனுபவ சான்றிதழுடன்
கீழ் வரும் உரும்பிராய் விலாசத்திற்கு
நாளை (10-12-82) வெள்ளிக்கிழமை
நேர்முகப் பரீட்சைக்கு வரவும்.
A. குமாரசாமி,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.
தலைமை அலுவலகம்:
**Construction & Development Co. Ltd,**
37, S. de S. Jayasinghe Mawatte, Nugegoda.
தொழில் அனுமதிப்பத்திரம் இல: 96
தொழில் அங்கீகாரம் இல: F E/1/118
(5413)

# யாழ். ப. நோ. கூ. சங்க ஊழியர் கடனுதவிச் சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியர் கடனுதவிச் சங்கம் ஒன்றை அமைப்பதற்கான ஆரம்பக் கூட்டம் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு எஸ் ஞானப்பிரகாசம் முன்னிலையில் நடைபெற்றது. இச்சங்கம் அமைப்பதால் ஏற்படும் நன்மைகள்பற்றி கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் ஊழியர் மத்தியில் எடுத்துரைத்தார்.

மேற்படி கடனுதவிச் சங்கம் வடபகுதியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்திலும் அமைக்கப்பட்டு வருவதாகவும் கடனுதவிச் சங்கத்தால் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியர்கள் ஐயாயிரம் ரூபா வரையிலானகடன் பதினெட்டுவீத வட்டியில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் ஊழியர்களுக்கு மரண சகாயமும் கிடைக்க இருப்பதாகவும் மேலும் எடுத்துரைத்தார்.

கூட்டுறவு உதவி ஆணையாளர் முன்னிலையில் கடனுதவிச் சங்கத்துக்கு ஒன்பதுபேர் கொண்ட நிர்வாகக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவில் ப. நோ. கூ. சங்கப் பொதுமுகாமையாளர் திரு. இ. இயேசுதாசன் தலைவராகவும், திரு. இரா. லோகநாதன் உபதலைவராகவும், திரு. ரி. பாலேந்திரா காரியதரிசியாகவும், திரு. த. தவராஜா பொருளாளராகவும், திரு. மு. செல்வநாதன் உபபொருளாளராகவும் நிர்வாகக் குழுவில் திரு. ப. அனரனி, திரு நா. சின்னத்துரை, திருமதி ஆர். எஸ் யோண், திருமதி ஞானசம்பந்தர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M B 14216

கந்தையா ஞானேந்திரன், அளவெட்டி தெற்கு, அளவெட்டி..

வழக்காளி

எதிராக

1. விஞசி சிவலையும் 2 பெண் குஞ்சியும்
3. இராயப்பு செபமாலையும்
4. பெண் பொன்னம்மாவும்
எல்லோரும் மயிலிட்டி வடக்கு, மயிலிட்டி, காங்கேசன்துறை.

எதிராளி

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில் M B 14216-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1982-ம் ஆண்டு மார்கழி மாதம் 21-ந் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 1-45 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

ரூபா 5329-30 பின் 3-11-73 தொடக்கம் 18-10-74 வரைக்கும் ரூபா 4000/-க்கு 12% வீத வட்டியும் பின் முழுத்தொகையும் இறுக்கும் வரைக்கும் 5% வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 640 சதம் 75 இம்முழுத்தொகையிலும் ரூபா 3500/- கழித்து மிகுதி முழுவதும்.

### ஆதனவிபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று முலவை இறை "இளமொல்லை" நிலப்பரப்பு 12 குளி 3 6 இதில் தெற்குப் புறமாக அறுதிவிற்ற நிலப்பரப்பு 10 நீக்கி மிகுதி நிலப்பரப்பு 2 குளி 3 6 பனைகளும் வளவிசளும் இதற்கு எல்லை கிழக்கு புதிதாக வைக்கப்பட்ட ஆறுமுழ கையொழுங்கையும், கையொழுங்கை முகப்பும். வடக்கு வயிரவன் கந்தையாவுக்கும் பெண் இராசமணிக்கும் உரிய ஆதனம், மேற்கு வயித்திகந்தப்பிள்ளைக்கும் பெண் பதாத்தைக்குமுரிய ஆதனம், தெற்கு கதிரன் கந்தனும் பெண் இலட்சுமிக்குமுரிய ஆதனம், இதடங்கலும் இன்னும் குறித்த கையொழுங்கையாலும் இன்னும் வடக்கே கணபதிப்பிள்ளை செல்வரத்தினதும் பெண் சரஸ்வதியினதும், காணியின் மேற்கெல்லை அருகால் வைக்கப்பட்டஆறு முழ அகல கை ஒழுங்கையாலும் போக்குவரவு செய்யும் உரித்தும்.

2. மேற்படி மயிலிட்டிக் கோவிற்பற்று மயிலிட்டி இறை "கொட்டவளை" நிலப்பரப்பு 20 இதற்கெல்லை கிழக்கு சின்னப்பு கதிரேசுவுக்கும் வல்லிபுரம் விசுவலிங்கத்திற்குமுரிய ஆதனம், வடக்கு வயிரவன் கட்டையனின் ஆதனமும் மயிலக்கட்டைப் பிள்ளையார் கோவிலுக்குரிய ஆதனமும், மேற்கு மாலாணர் அம்மையாவின் உரிமைக்காரரின் ஆதனம், தெற்கு சிதப்பரப்பிள்ளை சின்னத்துரையினுதனமும் மயிலக்கட்டை பிள்ளையார் கோவிலுக்குமுரிய ஆதனம் இதடங்கலிற் சொரியலாய் (1/4) நாலிலொரு பங்கும் அதற்குரியவைகளும்.

சி. சோ. நரசிங்கம் ஜே. பி.
நீதிமன்ற விற்பனையாளரும், மதிப்பாளரும்.

தொல்புரம்,
10-10-82. (5414)

## சங்கீத நடன நாடகப் போட்டி:

# மிகச்சிறந்த நிகழ்ச்சிகள் ரூபவாஹினியில் ஒளிபரப்பாகும்

(திருகோணமலை)

திருகோணமலையில் இம்மாதம் 11ம், 12ம் திகதிகளில் நடைபெற இருக்கும் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையேயான சங்கீத, நடன, நாடகப் போட்டியில் தெரிவு செய்யப்படும் மிகச்சிறந்த நிகழ்ச்சிகள் 'ரூபவாஹினியில்' ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளன.

இத்தகவலை திருகோணமலை கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இசை, நடனம், நாடகம் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் தலா இரண்டு நிகழ்ச்சிகள் வீதம் பத்து நிகழ்ச்சிகள் ஒளிபரப்புச் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் நடைபெறும் இப் போட்டியில் இசைப்போட்டி ஸ்ரீகோணேஸ்வர வித்தியாலயத்திலும், நடன, நாட்டிய நாடகப் போட்டி ஸ்ரீ சண்முக வித்தியாலயத்திலும் நாடகப் போட்டி இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

போட்டியில் 2,100க்கும் அதிகமான போட்டியாளர்கள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப் படுவதாகவும், போட்டியாளர்களுக்கு உணவு, தங்குமிட வசதிகள் செய்யப்பட்டு இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கரவெட்டி நி)

# மயிலிட்டி கொலை வழக்கு: விசாரணை ஒத்திவைப்பு

[மாவிட்டபுரம்]

மயிலிட்டி கொலைச்சம்பவம் தொடர்பான விசாரணை அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளரின் அறிக்கையை எதிர்பார்த்து ஜனவரி 3ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

மயிலிட்டியைச் சேர்ந்த சீனியர் துரைசாமி என்னும் நபர் கத்தியால் வெட்டப்பட்டு கொலையுண்ட சம்பவம் தொடர்பாக கந்தையா பாலசிங்கம், இளையகுட்டி சுதிரமலை ஆகியசந்தேகநபர்கள் கைதாகி றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீண்டும் நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டபோது "வழக்கின் விசாரணையை" ஆரம்பிக்கலாமா? என நீதிபதி கேட்டார்.

அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளரின் அறிக்கை கிடைக்கவில்லையென தெரிவிக்கப்பட்டதால் அதனை எதிர்பார்த்து விசாரணையை ஜனவரி 3ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

அதுவரை சந்தேகநபர்களை றிமாண்டில் வைக்குமாறும் நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் உத்தரவிட்டார்.

[கொழும்பு]

மேற்கு ஜெர்மனி வழங்கவிருக்கும் ஒருகோடி ஐம்பது லட்சம் மார்க் கடனில் ஒரு பகுதியில் வாழைச்சேனைக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்திற்குப் புதிய இயந்திரம் ஒன்று வழங்கப்படவிருக்கிறது. [இ]

# இந்துமா கடலில் புதிய அமெரிக்க இராணுவத்தளம்!

## ஜனவரியிலிருந்து இயங்கும்

### ரீகனின் 'எம்எக்ஸ்' ஏவுகணைகளை நிறுவும் தீர்மானம் பிரதிநிதிகள்சபையில் தோல்வி!

நியூயோர்க், டிச. 9

இந்துமகா சமுத்திரத்தில் புதிய பெரும் இராணுவதளமொன்றை ஐக்கிய அமெரிக்கா அமைக்கவிருக்கின்றது. இப்புதிய தளம் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து செயல்பட ஆரம்பிக்கும்.

அமெரிக்கப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக சில சம்பவங்கள் இந்துமாகடலிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் காணப்படுவதாலேயே இப்புதியதளம் ஆரம்பிக்கப்படுவதாக அமெரிக்க பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்துமகா சமுத்திரப் பிராந்தியத்தில் அமையவிருக்கும் இப்புதிய தளத்தில் சுமார் இரண்டு லட்சத்து 30 ஆயிரம் அமெரிக்க பாதுகாப்புப்படையினர் கடமையாற்றுவர் இவர்களில் கடற்படை வீரர்களும், இராணுவத்தினரும் பெருமளவில் அடங்குகின்றனர்.

அமெரிக்காவின் இராணுவத்தளமொன்று இந் சமுத்திரத்திலுள்ள பிரிட்டனுக்குச் சொந்தமான டியாகோகார்ஸியா தீவிலும் இயங்கிவருகின்றது. அத்துடன், வேறு முக்கிய தீவுகளிலும் அதன் இராணுவ தளம் சிறிய அளவில் இயங்கி வருகின்றதென்பது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, 'எம்-எக்ஸ்' என்ற அணுசக்தி ஏவுகணைகளை ஐரோப்பாவில் நிறுவுவதற்கான அதிபர் ரீகனின் தீர்மானம், அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபையில் 245க்கு 176 என்ற ரீதியில் வாக்கெடுப்பின் போது பெரும் தோல்வியைத் தழுவியது.

''எம். எக்ஸ்' ஏவுகணைகளை நிறுவுவதற்கு எதிராக பெருமளவு வாக்குகள் கிடைத்தால், நாட்டின் பாதுகாப்புக்கு அது மிரட்டலாக அமையும் என்பதனை உணராது பிரதிநிதிகள் சபை தவறுதலாக வாக்களித்துள்ளது'' என்று அதிபர் ரீகன் வாக்கெடுப்பினை அடுத்து கருத்து வெளியிட்டார்.

பாதுகாப்பமைச்சர் திரு. வெயின் பேகர் தெரிவித்த கருத்தில், ''எம் எக்ஸ்' ஏவுகணைகளை நிறுவுவதற்கு எதிராக வாக்குகள் கிடைத்துள்ளமை, சோவியத் யூனியனுக்கு அதன் இராணுவ நடவடிக்கைகளை விரிவுபடுத்த பெரும் வாய்ப்பாக அமையலாம்'' என்றார். (கி)

## தென்னுபிரிக்கா, அங்கோலா இரகசிய பேச்சுவார்த்தை!

லண்டன், டிச. 9

அங்கோலாவுடன் இரகசியப் பேச்சுவார்த்தைகளை நடத்தியதாக தென்ஆபிரிக்கா அறிவித்துள்ளது. இப் பேச்சுவார்த்தை நமீபியாவிற்கு சுதந்திரம் வழங்குவது தொடர்பாகவே அமைந்திருந்ததென்று தெரிவிக்கப்பட்டது.

தெ. ஆபிரிக்கா சார்பில் அந்நாட்டின் வெளிநாட்டமைச்சர் திரு. பிக்போதா அங்கோலா அரசுடன் இவ் இரகசியப் பேச்சுக்களை நடத்தினர்.

1975-ம் ஆண்டுக்குப் பின்னர் தெ. ஆபிரிக்காவால் முதல் தடவையாக அங்கோலாவுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தை இதுவாகும். (கி)

## பிரித்தானியர் பற்றி சில கணிப்பீடுகள்!

லண்டன் டிச 9

பிரிட்டனின் பெருந்தொகையானோர் தேநீர் அருந்துவதனையும் உதைபந்தாட்டத்தைப் பார்வையிடுவதனையும் குறைத்து வருகிறார்கள்.

இத்தகவல் பிரிட்டனின் புள்ளி விபரவியல் சேவையினரால் நடத்தப்பட்ட ஆய்வுகளிலிருந்தும் வெளியாகியுள்ளன.

இந்த ஆய்வு விபரங்களில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: 1961 க்கும் 81 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கோப்பி அருந்துபவர்களது எண்ணிக்கை பிரிட்டனில் அதிகரித்துள்ளது இதேவேளை தேநீர் அருந்துபவர்களின் எண்ணிக்கை 30 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

1970 களில் உதைபந்தாட்டப் பந்தயங்களைப் பார்வையிடத் திரண்டவர்களின் எண்ணிக்கை, கடந்த மூன்று உதைபந்தாட்ட பருவங்களின் போதும் பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளது.

தனித்து வாழ்பவர்களின் எண்ணிக்கையும் 61-ம், 81-ம் ஆண்டுப்பகுதிகளில் இருமடங்காக 19 லட்சத்திலிருந்து 42 லட்சமாக மாறியுள்ளது.

கடந்த ஆண்டு மட்டும் 1 லட்சத்து 57 ஆயிரம் விவாகரத்துக்கள் வழங்கப்பட்டுள்ளன இத்தொகை 1971-ல் வழங்கப்பட்டதை விட இருமடங்காகும். [கி]

## சோவியத் யூனியனில் பெரிய அளவில் கைத்தொழில் நிலையங்கள் அமையக்கூடாது

மாஸ்கோ, டிச. 9

மாபெரும் கைத்தொழிற்சாலைகளை நிறுவுவதைவிடுத்து மேற்கத்திய நாடுகளில் போன்று சிறிய அளவில் சோவியத் யூனியனிலும் தொழிற்சாலைகள் கட்டப்படவேண்டும் என்று சோவியத் யூனியனின் பொருளாதார நிபுணரான திரு. குலாதீன் தெரிவித்துள்ளார்.

பழையபாணியில் சோவியத் யூனியனில் கைத்தொழில் நிலையங்கள் பெரியளவில் நிர்மாணிக்கப் படுகின்றனவென்றும், இத்தகையதொழிலகங்களுக்கு அதிக வேலையாட்கள் தேவைப்படுகின்றனரென்றும், இதனால் பெருமளவு தொழிலாளிகள் குறிப்பிட்ட சிலகைத்தொழில்களில் மட்டும் பெருமளவு பங்கெடுக்க வேண்டியுள்ளதென்றும் இவர் மேலும் தெரிவித்துள்ளார். அத்துடன் இவ்வாறு பல தொழிலாளிகள் குறிப்பிட்ட சில கைத்தொழில்களில் மட்டும் ஈடுபடுவதால் கைத்தொழில்துறை மேற்கத்திய நாடுகளில்போன்று விரிவு பெறமுடியாத நிலையிலுள்ளதென்றும், சிறிய தொழிற்சாலைகளை அமைக்கும் பட்சத்தில் ஒவ்வொன்றிலும் குறிப்பிட்ட சில தொகையினராக பலர் பல்வேறுபட்ட கைத்தொழில்களில் ஈடுபடமுடியுமென்றும் கூறினர்.

சோவியத்தின் பிராவ்தா பத்திரிகையிலேயே நிபுணர் திரு. குலாதீன் மேற்கண்ட கருத்தைவலியுறுத்தியுள்ளார். இவ்வாறு இவர் சோவியத் பொருளாதார அமைப்புக்கு எதிராக வெளியிட்டுள்ள இக்கண்டனம், இந்நாட்டில்முதல் தடவையாக வெளியிடப்பட்டதொன்று எனத் தெரிவிக்கப்பட்டது.

இக்கண்டனம் சோவியத் பொருளாதார அமைப்புக் குறித்து இந்நாட்டில் விவாதங்களை நடத்த தூண்டுகோலாக விளங்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (கி)

## அமெரிக்காவிடமிருந்து அணுகுண்டு சாதனங்கள்பெற பாகிஸ்தான் முயன்றுள்ளது!

- லண்டன் பத்திரிகை அறிவிப்பு

புதுடில்லி டிச. 9

அணுகுண்டு தயாரிப்பதற்கு தேவையான சாதனங்கள் சிலவற்றை பாகிஸ்தான் அமெரிக்காவிடமிருந்து பெற முயற்சித்ததென்று லண்டனிலிருந்து வெளியாகும் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

இவ்வாறு பாகிஸ்தான் அமெரிக்காவிடமிருந்து அணுகுண்டுக்கான முக்கிய சாதனங்களை பெற முயற்சித்தது குறித்து அதிபர் ரொனல்ட் ரீகன் கவலை கொண்டிருந்தாரென்றும், பாகிஸ்தானின் ஆட்சிகளுக்கு மறுப்புத்தெரிவிக்கும்வகையில் தனது பிரதிநிதி ஒருவரை திரு ரீகன் பாகிஸ்தானுக்கு இரகசியமாக அனுப்பி வைத்திருந்தாரென்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது [கி]

## லெபனுனிலிருந்து சகல வெளிநாட்டு துருப்புக்களும் வெளியேற வேண்டும்

### அமெரிக்கா அவசர வேண்டுகோள்

நியயோர்க், டிச. 9

லெபனுனிலிருந்துசகலவெளிநாட்டுத் துருப்புகளும் வெளியேற வேண்டும் என்று அமெரிக்கா அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது

லெபனுன் அரசாங்கம் தனது நாட்டிலிருந்து சகல அந்நிய துருப்புக்களும் வெளியேற வேண்டுமென்று விடுத்த கோரிக்கையை பரிசீலனை செய்த பின்னரே அமெரிக்க அரசு மேற்கண்ட அவசர வேண்டுகோளை விடுத்தது.

அமெரிக்க உப ஜனுதிபதி திரு. ஜோர்ஜ் புஷ், பாதுகாப்பமைச்சர் திரு பேக்கர், மேற்காசியப் பிரதிநிதிகளான திரு. பிலிப் ஹபிப், திரு மொரிஸ் டிரெப்பர் ஆகியோர் அமெரிக்க அரசின் இந்த அவசர வேண்டுகோளை, அது வெளியிடப்படுமுன்னர் தீவிரமாக ஆராய்ந்தனர்.

லெபனுனிலிருந்து வெளிநாட்டுத் துருப்புக்களை வெளியேறக்கோரியுள்ள அதேசமயம், அங்குள்ள ஐ. நா. பாதுகாப்புப் படைகளை மேலும் பலப்படுத்துவது குறித்தும் அமெரிக்காவினுல் ஆலோசிக்கப்பட்டது அத்துடன் லெபனுனில் ஐ நா படைகளிலுள்ள அமெரிக்க துருப்புக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது ஆனல் இவ்வதிகரிப்பு பற்றி எதுவித முடிவும் எடுக்கப்படவில்லை

தற்போது ஐ. நா. பாதுகாப்புப்படையில் 1200 அமெரிக்கக் கடற் படையினர் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. [கி]

## காஞ்சி காமகோடிகள் பீடமேறிய 75-வது விழா

சென்னை, டிச. 9

காஞ்சி காமகோடி பீடாதிபதியான ஜகத்குரு சந்திரசேகர சரஸ்வதியின் பீடமேறிய 75-வது ஆண்டுவிழா நேற்று சென்னையில் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் பேசிய அரசியல் பிரமுகர் ஒருவர், ''ஜகத்குரு சங்கராச்சாரியாரின் வாழ்வு உலக மக்களுக்கு பெரும் வழிகாட்டியாக அமைந்துள்ளது'' என்றார்

இந்த கொண்டாட்டங்களின் ஒரு அம்சமாக ஜகத்குரு சந்திரசேகர சரஸ்வதியின் வாழ்க்கையைச் சித்தரித்துக் காட்டும் கண்காட்சியொன்றும் சென்னை நகரில் நடத்தப்பட்டது

1890-ம் ஆண்டு அவதரித்த ஜகத்குரு சந்திரசேகர சரஸ்வதி, 1907-ல் தமது 17 வயதில் காஞ்சிபீடத்தில் சேர்ந்து கொண்டார். (கி)

### மணிவாக்கு

''செய்தித் தாள்களே இல்லாத அரசாங்கம் வேண்டுமா? அல்லது அரசாங்கம் ஏதும் இல்லாமல் செய்தித் தாள் மட்டும் வேண்டுமா? என்று என்னைக் கேட்டால் நான் இரண்டாவதைத் தேர்ந்தெடுப்பேன்''.

—ஜெபர்சன்

# நமது நோக்கு

## மனித உரிமைகள்

குதிரை செத்தபின் அதன் விலை பேசுவதும், மனிதன் இறந்தபின் அவனுடைய புகழ் பாடுவதும் மனிதசுபாவம்; ஆனல் அந்த சுபாவத்துக்கு விழா எடுப்பதில் எங்களை விட வீரர்கள் வேறு எங்கும் உண்டா?

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறுநிறுவனங்கள் ஆதரவில் இன்று மனிதனின் அடிப்படை உரிமைகள் தினம் விமரிசையாகக் கொண்டாடப்படும் அர்த்தம் என்ன? உரிமைகளைப் போற்றி, இந்நாட்டில் அவை வலுப்பெறுகின்ற படலத்தை விபரிப்பதென்ருல் அவை அருகிப் போகின்றனவே என்பது நிச்சயமான முடிபு; மனித உரிமைகள் மறுக்கப்படுகிறதென்று ஓலமிடும் போர்வழிகளில் பலர் அரச பக்கத்துக்கு மாற நேரிட்டால் அந்த நிலை தலைகீழாக மாறுவதையும் நாம் அனுபவத்தில் கண்டிருக்கிருேம். கட்சி கலப்பற்ற அறிஞர்களே உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும்.

கடமைகள் செவ்வனே புரியப்பட்டால் உரிமைகள் தாஞகவே கிடைக்குமென்பது ஒரு பொது நீதிவாக்கியம்; நடைமுறையில் இது சாத்தியமாவதற்கு ஒருதார் மீக அரசு ஆட்சிபுரிய வேண்டுமென்பது வெளிப்படை.

முஹாரி ராகத்தில் நாம் தொடங்கியிருப்பது இச்சுப தினத்திலமுறையல்ல என்று நினைக்கும் வாசகர்களுக்கு ஒரு 'டபிள் டோஸ்' எம்மிடம் உண்டு.

அகில உலகிலும் மிகப் பலம், பணம், பெருமை வாய்ந்த அரசு அமெரிக்க அரசு அதன் ஜனதிபதி ரீகன் கொண்டுவந்த நூறு கோடி டாலர் ஏவுகணைத் திட்டம், மக்கள் பிரதநிதிகள் சபையில் இன்று மண்கவ்விவிட்டது. அதில் என்ன ஆச்சரிய ?

ஜனநாயகத்துக்கு வரைவிலக்கணம் கொடுத்தவர் அமெரிக்காவின் ஆபிரகாம் லிங்கன்; அந்தக் கட்டுப்பாட்டுக்கு அமெரிக்கதேசம் எப்போதும் கட்டுப்படடதல்ல; மக்கள் தம் கடமைகளை என்றும் அதற்கமையப் புரிந்தவர்கள் அல்ல; லிங்கன், கென்னடி பதவியில் சுட்டுக் கொலைப்பட்டவர்கள் இன்றைய ஜனதிபதியே துப்பாக்கிச் சூட்டில் உயிர் தப்பியவர்; ஆனல் பிரமாண்டமான சதி ஒன்று அமெரிக்காவில் இவ்விக் குறைகளை மட்டுப்படுத்தி நாட்டின் சுதந்திரப் போக்கைப் பேணி வருகின்றது.

அது என்ன? பொதுஜன அபிப்பிராயம், தனி மனிதன்; மக்கள் கூட்டம் பேணிக்காக்கும் பெரும் உரிமைகளே; சிந்தனைச் சுதந்திரமும், அதனல் உருவாகும் கருத்துரிமையும். மனித அடிப்படை உரிமைகள் பட்டியலில் 18-வது ஷரத்து சிந்தனைச் சுதந்திரம்; 19-வது ஷரத்து காருத்துரிமை; எதுவித தலையீடில்லாத அபிப்பிராய உரிமை.

''அமெரிக்க ஜனதிபதி ஒரு போராளி; மூன்ருவது உலகயுத்தத்துக்கு அடுக்குப் பண்ணுகிருர்'' என்று ரஷ்ய பத்திரிகைகள் விளம்பரம் செய்வதில் ''வேலையில்லை''; அவ்வாறு அமெரிக்க மக்கள் நினைக்கவேண்டும்; அவர்களின் தெளிந்த கருத்துக்களை பத்திரிகைகள் ''விளாச'' வேண்டும். 'நியூயோர்க் டைம்ஸ்' தலையங்கம் எழுதவேண்டும்.

தேசம் முழுவதும் அது பரபரப்பை ஏற்படுத்த வல்லது; ஒரு சர்வாதிகாரியின் அதிகாரங்கள் பல ஜனதிபதிக்கு உண்டு; ஆனல் பத்திரிகைளுக்கு 'சீல்' செய்ய, -ஏன் எச்சரிக்கை விடுக்க அவருக்கு எவ்வித அதிகாரமும் இல்லை; அந்த நாட்டில் ஜனநாயகம் அதில் தான் உண்டு!

இன்று ஜனதிபதிக்குக் கிடைத்த தோல்வியை மாஸ்கோ நன்ருக ரசிக்கின்றது; அங்கு இவ்வித பத்திரிகை, ஆட்சியைக் கண்டிக்க கனவிலும் நினைக்காது, ஏன்? அவ்வித பத்திரிகை அங்கு இல்லை.

முன்னுள் ஜனதிபதி நிக்ஸனை எவ்வாறு பதவியிலிருந்து நீக்குவதென்று விசனம் எழுந்ததும், பத்திரிகைகள் உதவின; ஜனதிபதி நிக்ஸன், பத்திரிகைகள் பொழிந்த வசைமாரிக்கு அஞ்சி தமது பதவியை ராஜினமாச் செய்தது எவரும் அறிந்ததே!

இன்று எங்கள் நாட்டைப் பிச்செறியும் பிரச்னை ''சர்வஜன அபிப்பிராய வாக்கெடுப்பு''.

சிந்தனைச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம், உள்ள நாடு இது. நாம் முன்னே குறிப்பிட்ட 18வது, 19வது மனித உரிமைகள் இந்நாட்டு மக்களுக்கு உண்டு; உண்டுதாஞ என்ருருவர் சவால் விட்டால், தயக்கம் நிச்சயம் ஏற்படும்; உயர் நீதி மன்றத்துக்கே கேள்வியால் எழும் வழக்கு போய் விட்டது.

பேச்சுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம், கருத்துப் பரிமாறலில் சுதந்திரம் – இங்கு இவையெல்லாம் இன்று எதுபற்றி? இன்றைய ஆட்சியை இன்னும் ஆறு வருடங்களுக்கு நீடிக்கலாமா என்ற கேள்வி பற்றியது.

இந்தக் கேள்விக்குரிய மனித உரிமை 21வதுஷரத்தில் மூன்ரும் பகுதியில் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறது; ''மக்கள் இறைமையே அரசின் அதிகார உரிமை; இது காலத்துக்குக்காலம் எவ்வித குறைபாடுமற்ற சுதந்திரமான தேர்தலில் தெரிந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மூலம் பெறப்படவேண்டும்,

21வது ஷரத்தான இந்த ஜனநாயக உரிமைக்குப் பதிலாக ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது அரசியல் அமைப்புக்கு மாருனதல்ல என்று நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது,

எனவே மக்களின் அபிப்பிராயமே இதற்கு முடிவு காண வேண்டும்.

இதற்கு அச்சாணியான- கருத்துச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் நடைமுறையில் எவ்வாறிருக்கு? கேள்விக்குறிய விடையாயிருந்தால் நிலைமை என்னவென்பது தெளிவாகும். மக்கள் காண்பதும் கேட்பதும் அரசின் பிரசாரமே!

பல எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் இதற்கு மாருக அரியபெரிய கருத்துக்களைச் சொல்கின்றனர்; எந்தப் பத்திரிகைகளில் இவற்றைப் பொதுமக்கள் படிப்பது? எங்கள் சின்னஞ்சிறிய பத்திரிகையில் பிரயலப்படுத்திஞல் போதுமா? பெருப்பத்திரிகைகள் மூலைகளில் ஒளித்து விடுவது பத்திரிகைச் சுதந்திரமா?

கருத்துச் சுதந்திரம் பேச்சிலும் எழுத்திலும் மிளிரும் நிலையில் மனித உரிமைகள் மாண்டு மடிந்து விடமாட்டா.

மனம் போன போக்கில் பேசுவதை எழுதுவதை நாம் கருதவில்லை.

# சாதாரண ஆசிரியராகவிருந்து சாதனை செய்த தேவன்!

அவருக்கு தெரியாதது என்ன இருக்கிறத?

எழுத்துத்துறையா, மொழிபெயர்ப்பா, நாடகமா—

நடன அரங்கேற்றமா, விழாக்களா, பாடசாலை பரிசளிப்பு வைபவங்களா—

வைத்தியமா, மெக்கானிசமா—

அறிஞர்கள் தலைவர்கள் சொற்பொழிவுகளை வரிக்கு வரி மொழிபெயர்த்துக் கொள்வதற்கு ஆள்வேண்டுமா—

அத்தனைக்கும் ஒருவர்தான் நம்மத்தியில் இருக்கிருர் அவர்தான் இந்தத் தேவன்!

—விரல்விட்டு எண்ணக் கூடிய சில நாட்களுக்கு முன்னர் பரமேஸ்வராவீதியிலுள்ள தேவன்மாஸ்டரின் இல்லத்தில் நானும் பத்திரிகை நண்பர் ஒருவரும் அவருடன் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது அங்கு திடீரென்று நுழைந்த கொண்ட யாழ் இந்துக்கல்லூரி சாரண ஆசிரியர் நல்லையா மாஸ்டர், இதயபூர்வமாக ஒருசிறு சொற்பொழிவை எங்கள்முன் நிகழ்த்தினர்.

''தேவனைப்பற்றிப் பத்திரிகையில் எழுதும்போது அவரது ரசிகன் சொன்னன் என்று இதையும் எழுதுங்கோ'' என்றும் நல்லையா மாஸ்டர் அன்று கட்டளை போட்டார்

''சாதாரண ஆசிரியராகத்தான் இருந்தார்! ஆனல் அவர் பெருமைக்கு நிகராக வேறு யார்தான் ஈடுகொடுக்க முடியும்?'' என்று நல்லையா மாஸ்டர் சொற்பொழிவு செய்தபோது, தேவன் மாஸ்டர் இறுமாப்பு இல்லாது சிரித்துவிட்டு, பழைய அனுபவங்களைளங்களுடன் கலகலப்பாக சிரித்துச்சிரித்துப்பகிர்ந்து கொண்டார் அந்தக் கலகலப்பான, பெருமை பலவற்றைத் தனதாக்கிக்கொண்ட, 'சகல கலா வல்லவன்' என்று அழைப்பதற்குப்பொருத்தமான அந்த மனிதரின் மூச்சுநின்று விட்டது!

நெஞ்சத்துக் கவலைகளையெல்லாம் மறந்து மனம்விட்டு ஓராயிரம் விஷயங்களைப்பேசக் கொள்ள அந்தத் தேவன் இனி எம்முடன் இல்லை என்பதை நினைத்துப்பார்க்கக் கஷ்டமாகத்தான் இருக்கிறது.



அமெரிக்கர்களும், ரஷ்யர்களும் விண்வெளிக்கு மனிதனை அனுப்புமுன்னர் 'விண்வெளியில்' என்ற நூலின் மூலம் அக் கனவுகளைக் கண்டவர் தேவன்!

★

### தனித்துவம்

எழுத்துலகில் தேவன் ஈழத்தில் தனித்துவமிக்கவராகத் திகழ்ந்தவர்! ஈழத்து எழுத்தாளர் எவருக்குமே இல்லாத பெருமை தேவனுக்கு உண்டு!

—ஆனந்தவிகடன் 'தேவன்' பழம்பெரும் தமிழக எழுத்தாளர். அவரையே கவர்ந்தவர் இந்தத் தேவன்!

தேவன் யாழ்ப்பாணம்என்ற பெயரைத் தேவனுக்குச் சூட்டியவரும் அந்தத் தேவனே! தேவனின் 'கேட்டதும் கண்டதும்' என்ற நாவலுக்கு முன்னுரை வழங்கியவரும் அவரே!

★

### 'அணி' சேராதவர்

அகில இலங்கை எழுத்தாளர் சங்கத்தை ஆரம்பித்து அதன் செயலாளராக இருந்தார்! 'அணி' வைத்து, அறிக்கைகளை 'வளவள'வென்று விட்டுக்கொண்டு இருப்பவர்களைவிட தேவன் தனி மனிதனுக இருந்து சாதித்தது அதிகம்!

★

### யாழ். இந்து மறக்காதவர்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை இளையப்பா மகாதேவா என்ற தேவன் மிகவும் நேசித்தார்! அந்தக் கல்லூரியில் அவர் கல்விகற்பித்த நீண்ட பல ஆண்டுகளில், பல அதிபர்கள் கடமையாற்றியிருக்கிருர்கள்! எந்த ஆசிரியர்களுக்குமில்லாத தனி அன்பை அவர்களிடமிருந்து பெற்றிருக்கிருர்! பாடசாலைகளில் நடக்கும் எந்த விழாக்கள் என்ருலும், வைபவங்களென்ருலும் தேவன்தான் கைகொடுத்தார்! யாழ். இந்து தேவனை என்றுமே மறக்கமுடியாது!

★

### 'ஸ்ரீ'யை மறக்காதவர்

'ஸ்ரீ' போராட்டம் தமிழரசுக் கட்சி நடாத்திய காலம் நினைவு இருக்கிறதா?

அதை எல்லாம் நமது எம் பிக்கள் மறந்தே பல காலம்.

ஆனல்,

அந்தச் சமயத்தில் பிறந்த மூத்த குழந்தைக்கு 'ஸ்ரீ' போராட்ட நினைவாக உதய

[5-ம் பக்கம் பார்க்க]

### இன்ப இசை மழை பொழிந்தது

சங்கீதக் கச்சேரிகளில் முக்கிய இடம் வகிக்கும் வாத்தியமான மிருதங்கம் எவ்வளவு தூரம் இனிமையையும் இன்பத்தையும் அளிக்கவல்லது என்பதை கடந்த 6-ம் திகதி எஸ்.ரி ஆர் வீட்டில் நிகழ்ந்த இசைக் கச்சேரியின்போது தான் அறிந்து கொண்டேன். திரு. ஏ. கே. கருணகரன் பாட்டுக்கு திருச்சி சங்கரன் அவர்கள் மிருதங்கம் வாசித்தார்கள். அவர்களது கைவிரல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு லட்சம். ஆ-! என்ன இனிமையாக மிருதங்கம் வாசித்தார் என்பது அங்கு வந்தவர்களுக்குத்தான் தெரியும். அத்துடன் மிருதங்கம் பற்றிய அவரது விளக்கமான பேச்சு சங்கீதம் பயிலும் மாணவர்களுக்கு மட்டுமன்றி அதில் ஈடுபாடு கொண்ட அனைவருக்குமே பயன்படக் கூடியதாகவிருந்தது.

'மிருதங்கம்' என்பது பாட்டுக்கச்சேரிக்கு மாத்திரம் பயன்படும் வாத்தியமென்று தான் இதுவரை எண்ணியிரு

[5-ம் பக்கம் பார்க்க)

### நண்பரைப் பிரிதல் மிகத் துன்பம்

- காரை. செ. சுந்தரம்பிள்ளை -

தேவன் என்ருெரு சிம்மக்குரலோன்
செந்தமிழ் மேடை எங்கும் ஒலித்தோன்
நாவினல் கொடி கட்டிப் பறந்தோன்
நாவல் சிறுகதை நாடகம் தந்தோன்
பாவலர்க்கிணை யாக மொழிவோன்
பட்டி மன்றத் தாஞய் நின்ருன்
யாவரும் துயர்கொள்ள மறைந்தான்
யாங்ஙனம் துயர் ஆற்றுவோம் அந்தோ!

மொழிபெயர்ப்புக் கலையனில் வல்லோன்
முகமலர்கள் தனியாக உரைப்போன்
தெளிவு மிக்க கருத்துகள் சொல்வோன்
சிரிக்க வைக்கும் பிரசங்க மன்னன்
வழிவழி வந்த தமிழ்மொழி மீது
வற்றிடாத நற்பாசம் மிகுந்தோன்
எளிமை யானவன யாழ் இந்துபோற்றும்
எங்கள் தேவனை யாம் என்று காண்போம்

நாடகங்கள் நடக்கும் அரங்கம்
நாட்டியங்கள் புரியும் அரங்கம்
பாடகர் இசைகூட்டு மரங்கம்
பண்டிதர் வாதம் செய்யு மரங்கம்
பாடசாலை விளையாட்டரங்கம்
பாவலர் கவிசொல்லு மரங்கம்
வாடி நிற்க மறைந்தனன் தேவன்
வாழ்க அன்னவன் நாமம் பல்லாண்டே

ஈழ நாட்டவரோடு பிறரும்
ஏற்றிப் போற்றிடும் எங்கள் அறிஞன்
தோழன் கயிலாசைப் பிரிந்த சுயரம்
துளைத்தெடுக்கையில் வெந்தபுண் மீது
வேலினல் குத்தும் வேதனை தந்த
காலனைப் போற் கயவரே இல்லை,
ஞால மீதில் எதைப் பிரிந்தாலும்
நண்பரைப் பிரிதல் மிகத்துன்பம்

# “சர்வாதிகாரமான போக்கில் பன்முகப்படுத்தப்பட்ட நிதிஒதுக்கீடு”

## யாழ். மாவட்டசபைக் கூட்டத்தில் ‘ஆலால்’

(ஏ. வி. மாணிக்கம்)

“யாழ். மாவட்ட எம்.பிக்களின் சம்மதம் பெருமல் யாழ். செயலகத்திட்டமிடல் அதிகாரிகள் சர்வாதிகாரமான போக்கில் – தமது எண்ணப்படி 1983ம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதிஒதுக்கீடுகளைச் செய்திருக்கிருர்கள்” என்று கோப்பாய் எம். பி. திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம், யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் மாதாந்தப் பொதுக் கூட்டத்தில், கொண்டுவரப்பட்ட பிரேரணை ஒன்று மீது பேசுகையில் கண்டனம் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் நேற்றுக் காலை யாழ். செயலகத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

“1983ம் ஆண்டுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளைச் செய்யும்போது எந்தவகையில் நடந்துகொள்ள வேண்டுமென பிரதிதிட்டமிடல்பணிப்பாளர் அனுப்பியகடிதத்தில் தொடர் வேலைகளுக்கென 50 லட்சம் ரூபாய்களை ஒதுக்கிவைத்துள்ளார்.

### பிரேரணை

‘ஒவ்வொரு தொகுதியிலும் செய்துமுடிக்கப்பட வேண்டிய தொடர்வேலைகளை இனங்கண்டு ஒதுக்க வேண்டிய தொகையை ஒதுக்கும் கடமையை அவ்வத் தொகுதிப் பாராளுமன்றஉறுப்பினர்கள் செய்யவேண்டுமென்றும் இதனைச்செய்வதற்கு திட்டமிடல் பகுதி, எம். பிக்களுக்கு ஆலோசனை வழங்கலாமெனவும் இச்சபை தீர்மானிக்கிறது” என்னும் பிரேரணையை திரு ந. இராசேந்திரன் கொண்டுவந்தார்.

### ஆலால் ஆவேசம்

இப்பிரேரணையை ஆதரித்து கோப்பாய் எம். பி. திரு. ஆலாலசுந்தரம் காரசாரமாகப்பேசினர்.

அவர் சில கட்டங்களில் அபிவிருத்திசபைத் தலைவரை நோக்கி ஆவேசமாகக் கேள்விகள் எழுப்பினர். அக்கேள்விகளுக்கெல்லாம், ஆப்புவைத்தாற்போல் தலைவர் பதிலளித்துக்கொண்டிருந்தார்.

காலை 10 மணிதொடக்கம் சபையில் சிரிப்பும், கலகலப்பும் ஏற்படத்தொடங்கி, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் சம்பந்தமான பிரேரணையுடன், சபை சற்று சூடேறத்தொடங்கியது. கோப்பாய் எம். பிக்கும், அபிவிருத்திசபைத் தலைவருக்குமிடையே பலத்தவாக்குவாதங்கள் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது

பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில், திட்டமிடல பகுதி எவ்வளவு தொகைஎனஎமக்குக் கட்டுப்படுத்தமுடியாது என்றும் மாவட்டங்களுககு நிதி ஒதுக்கீடுசெய்வதில் கூட எம். பிக்களின் அனுமதிபெறவேண்டும் என்றும் திரு ஆலாலசுந்தரம் வலியுறுத்தினர்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் எம்.பிக்களின் தொகுதி நிதி ஒதுக்கீடான தலா 25 லட்சம் ரூபாயில் 13 லட்சம் ரூபாவுக்குத்தான் அபிவிருத்திவேலைகள் குறித்து எனனிடம் கேட்கப்பட்டது கடந்தஆண்டுகளில்கூட எம் பிக்களின் அனுசரணையுடன் தான் தொகுதிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது” என்று கோப்பாய் எம் பி குறிப்பிட்டபோது, தலைவர் குறுக்கிட்டு, உங்களுக்கு ‘வழிகாட்டல்’ சம்பந்தமான கோவை ஒன்று முன்னரே அனுப்பிவைக்கப்பட்டது என்ருர்.

“எங்களுக்குத் தரப்பட்ட வழிகாட்டலில் விபரமாக எதுவும் இல்லை என்று திரு. ஆலாலசுந்தரம் சொன்ஞர்.

### “எம். பிக்களுக்கு தெரியாது”

அவர் தொடர்ந்து பேசுகையில், எம்.பிக்களுக்குத் தெரியாமலே திட்டமிடல் அதிகாரிகள் நிதிஒதுக்கீடு செய்திருக்கிருர்கள். கோப்பாய்தொகுதியில அபிவிருத்திசெய்யவேண்டிய பல வேலைகள் இருக்கின்றன, ஒதுக்கப்பட பணம் 13 லட்சம் போதாது என்றுதெரிவித்தார்

82ம் ஆண்டுதொடர் வேலைக்கு 50 லட்சம் ரூபா தொகுதி ரீதியிலா? மாவட்ட ரீதியிலா திட்டமிடல் பகுதியின ஒதுக்கியிருக்கின்றனர் என்று கேட்ட கோப்பாய் எம்.பி, மாவட்ட ரீதியிலாஞல் மகாதேவா தாபோதிக்கும், யாழ். ஆஸ்பத்திரிக்கட்டிடத்துக்கும் ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றும் அவர் சொன்ஞர்.

தலைவர்: 81ம்ஆண்டு ஆனிக்குப் பின்னர் சொல்லும், அதற்குமுன்னர்என குத்தெரியாது

திரு ஆலால்: 81 ஆனிக்குப் பின்னர் தொலைபேசி இணைப்பு வேலைகளுக்கு ஒருலட்சம் ஒதுக்கீடு மற்றும் இலங்கை மின்சாரசபை வேலைகள் நிதி ஒதுக்கீடு ஆகியன பற்றி எதுவிம் தெரியவில்லை. மின்சார சபையைக் கேட்டால் தமக்கொன்றும் தெரியாதென்கிருர்கள், உள்ளூராட்சி மன்றங்களும் அப்படியே எங்கே விதியிருக்கிறதோ? யார் பொறுப்போதெரியாது சில எம்,பிக்களின் தொகுதிகளுக்கு 13லட்சம், 17 லட்சம், ஏன் 21 லட்சம் கூட ஒதுக்கியிருப்பதாகச் சொல்கிருர்கள், சில எம்.பிக்களுக்கு கொடுக்கவேயில்லையாம்.

### சீர்கேடு

“வசாவிளானில் சிறுபான்மைத்தமிழரின் பாடசாலை மிகவும் சீர்கேடாக உள்ளது. குட்டியப்புலத்திலுள்ள அந்த மக்களுக்கு குடிநீர்கிணறு வெட்டிக்கொடுக்க நிதிபற்ருக்குறையாக இருக்கிறது.

### எம். பிக்கள் செல்லாக்காசுகள்

திட்டமிடல் பகுதியினர் சர்வாதிகாரம் கொண்டவர்களாக இருப்பதால், எம். பிக்கள் செல்லாக்காசாக மதிக்கப்படுகிருர்கள்போல் தெரிகிறது

இக்கட்டத்தில் தலைவர் குறுக்கிட்டு, அங்கத்தவர் உணர்ச்சிவசப்பட்டு பேச வேண்டாம் என்று சொல்லி ஒழுங்குப்பிரச்னையைக் கிளப்பினர்.

யாழ். ஆஸ்பத்திரி கட்டி முடிக்க 81ம் ஆண்டுவரை மூன்றுகட்டங்களாக முறையே ரூபா 50 லட்சம், 100 லட்சம், 100 லட்சம் ஆக 250 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது எப்படியும் ஆஸ்பத்திரிகட்டி முடிக்கப்படவேண்டும், இதை எப்படி கணக்கடுக்கலாம். திட்டமிடல் பகுதிக்கு ஒதுக்கீடு செய்ய அதிகாரம் உண்டு. இவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது, இவ்வளவு பணம் அபிவிருத்திக்கு எனக்கணக்குப் பார்க்கிறது. யார்? என்று கேட்ட அபிவிருத்திசபைத் தலைவர், எம்.பிக்கள் சபைக்கு கொடுத்தவாக்குறுதியைக்காப்பாற்றவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

திரு ஆலாலசுந்தரம்: இச்சபையில் எதுவிதத்திலும் தீர்மானிக்கவில்லை. மகாதேவா தாம்போதிக்கு ஒதுக்கப்பட்ட மிகுதிப்பணம்போக, எம் பிக்களும், மாவட்ட அமைச்சுகளும் அரசாங்க அதிபரும் சந்தித்தபொழுதுதான் தீர்மானிக்கப்பட்டது. சபையில் எடுக்கவில்லை.

### ‘சபைக்கு அவமானம்’

திரு, ஆலாலசுந்தரம்: இச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. நாளை (வியாழக்கிழமை மகாநாடுநடாத்துவது இச்சபைக்கு அவமானமாகும். இச்சபையிலேயே விவாதித்து முடிவுசெய்யலாம்.

தலைவர்: உறுப்பினர்கள் கேட்கும்கேள்விகளுக்குப்பதில் சொல்ல இங்கு உத்தியோகத்தர்கள் இல்லை, சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் இங்கு சமூகமளிக்கமுடியாத நிலையில் இருக்கிருர்கள் எதற்கும் ஒரு முடிவுசெய்வோம்.

(இப்பிரேரணை பின்போடப்பட்டது) (மா)

---

## இன்பஇசை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ந்தேன். திருச்சி சங்கரன் அவர்கள் தனி ஆவர்த்தனம் வாசித்தபோது அது வெறும் பக்கவாத்தியம் மட்டுமல்ல, ஒரு ‘பக்கா’ வாத்தியம் என்பதை நிரூபித்து விட்டார்கள். அங்கு இசைமழை கணீரென்று பொழிந்தது. கேட்டுக்கொண்டிருந்த அனைவருமே இன்ப இசை மழையில் நனைந்து விட்டிருந்தனர். இது போன்ற கச்சேரிகள் நிறைய நிகழவேண்டும் என்பது எனது ஆசை.

திருச்சி சங்கரன் அவர்களைப் பாராட்டி யாழ்ப்பாணம் என். வீரமணி ஐயர் அவர்கள் பாடியனுப்பிய வாழ்த்துப் பாவை திரு. எஸ். கணபதிப்பிள்ளை மிகவும் இனிமையுடன் பாடிக் கையளித்தார். மிருதங்க வித்வான் ஏ. எஸ். இராமநாதன் நன்றியுரை கூறுகையில் சங்கரனுக்கு நிகர் சங்கரன் தான் என்றும் மிருதங்கம் மூலம் புதுமைகள் பல செய்து குருநாதர் வகுத்த வரம்புமுறை தவருது அவர் வழியே செல்லும் தனிமகன் என்றும் புகழ்ந்து சொல்ல வார்த்தையே இல்லை என்றும் பாராட்டிப் பேசினர்.

எஸ். ரி. ஆர். பேசுகையில் யாழ். வாசித்து இன்பம் தந்த பாணணுக்கு யாழ்ப்பாணத்தையே பரிசளித்ததாகவும் அதனுல் தான் யாழ்ப்பாணம் என்ற பெயர் இசைக்குப் பரிசாக வழங்கப்பட்டதனுலேயே ஏற்பட்டது என்றும் கூறி திருச்சி சங்கரன் அவர்களுக்கு நாம் நிலம் பரிசாக வழங்காவிட்டாலும் அன்பு நெஞ்சங்கலந்த அன்பளிப்பை வழங்குவதாகப் பொருத்தமாகப் பேசினர். அத்துடன் கருணகரனின் பாட்டுக்கு திரு ராதா கிருஷ்ணன் அவர்கள் மிக மிக இனிமையாக வயலின் வாசித்தார். இசைப்பேரறிஞர்கள் பலர் கூடியிருந்த இந்தக் கச்சேரி “ஓஹோ” என்று பாராட்டும் படியாக ஒரு நல்ல சூழலை ஏற்படுத்தியது. இதனை ஏற்பாடு செய்த திரு. எஸ். ரி. ஆருக்கு நன்றி கூற வேண்டும்.

இ. ஶ்ரீதரன்

---

## கிணற்றுக்குப் பலி!

[புங்குடுதீவு]

பெற்ருேர் இல்லாத சமயம் கிணற்றில் குளித்துக் கொண்டிருந்த சிறுமி கால் தவறியதால் கிணற்றுள் விழுந்து பரிதாபமாக மரணமானுர்.

புங்குடு தீவு 10ம் வட்டாரத்தைச் சேர்ந்த பொ. நிறைமதி என்ற சிறுமியின் மரணவிசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது. மரணவிசாரணை நடாத்திய புங்குடுதீவு திடீர் மரண விசாரணை அதிகாரி என் ஏ நமசிவாயம் விபத்து மரணம் என தீர்ப்பு வழங்கினர்.

---

## “கலை இலக்கிய உலகுக்கு பேரிழப்பு”

[யாழ்ப்பாணம்]

“தேவனின் மறைவு கலை இலக்கிய உலகுக்கு மாபெரும் இழப்பாகும். எழுத்தாளராகவும், அறிவிப்பாளராகவும், பட்டிமன்ற நடுவராகவும், ஏன் யந்திரவியல் விற்பனராகவும், இன்னும் இன்னேரன்ன பல துறைகளில் தனக்கே உரித்தான முத்திரையைப் ‘பதித்தவர்’” என்று யாழ் இலக்கிய வட்டத்தின் பிரமுகரும், எழுத்தாளஆசிரியருமான செங்கை சே. சிவராஜாவின் இரங்கற்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தேவன்–யாழ்ப்பாணம்அவர்களின் மறைவுகுறித்து அவர் விடுத்துள்ள இச்செய்தியில் இன்றைய பல எழுத்தாளர்களின் முன்னேடியும் வழிட்காடியுமான தேவனின் மறைவு ஈடு செய்யமுடியாக இழப்பு என்று மேலும் குறிப்பிட்டுள்ளார்.

---

## சாதாரண...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஶ்ரீ என்ற பெயரை வைத்தார்! அதன்பின் நான்கு குழந்தைகளைப் பெற்ருர்! நான்கு குழந்தைகளின் பெயர்கள் எல்லாருக்கும் ‘ஶ்ரீ’ என்றே முடித்தார்!

★

ஏதாவது ஒரு காரியத்தைச் சிறப்பாக செய்து முடிக்க விரும்புகிறீர்களா?

அது எதுவாகவும் இருக்கட்டும்!

தேவன் நம் கண்ணெதிரில் வருகிருர். காரியம் முடிந்தபாதிரி!

அந்த ‘ஆல்ரவுண்டர்’ இனி எம் எதிரில் வரவேமாட்டார்!

அது எவ்வளவு உண்மையோ, அதுபோல—

அவர் நினைவையும் எம்நெஞ்சிலிருந்து அகற்றவே அகற்ற முடியாது!

— ராஜகோபால்

---

## இன்றுமௌனப் பிரார்த்தனை

[யாழ்ப்பாணம்]

அனைத்துலக மனித உரிமை நாளையொட்டி, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை எதிர்த்தும் தமிழீழ விடுதலையை அங்கீகரிக்குமாறும் தடுப்புக்காவலிலுள்ள மதகுருமாரையும், விரிவுரையாளர் தம்பதிகளையும் ஏனைய இளைஞரையும் விடுதலை செய்யுமாறும் கோரி இன்று வெள்ளிக்கிழமை மௌனப்பிரார்த்தனை நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3மணிமுதல் 5மணி வரை மௌனப் பிரார்த்தனையும், தொடர்ந்து கருத்தரங்கும் தமிழீழ விடுதலை அணியின் ஆதரவின் கீழ் யாழ். தந்தை செல்வா சமாதியில் நடைபெறும்.

---

## பத்தமேனியில் சமாதானசபை

[அச்சுவேலி]

பத்தமேனிக் கிராம சேவை அலுவலர் பகுதியில் ஏற்படும் பிணக்குகளைச் சுமுகமான வகையில் தீர்த்து வைக்க பத்தமேனிக் கிராமோதய சபை சமாதானசபை ஒன்றை நிறுவியுள்ளது.

---

## மறைந்தனன் சொல்லின்செல்வன்!

தொன்மைய எவையும் நன்ருே இன்று
தோற்றிய எவையும் தீதோ
நன்மையை ஆய்ந்து கொள்க என்றன்று
சொன்ன ஞானி
சொன்னயச் சைவச்சீல உமாபதி
சிவத்தின் கூற்றைக்
தன்னருங் குறிக்கோளாகக்
கொண்டவோர் தமிழன் என்பேன்!

தோற்றத்தில் இளைஞன் சொல்லும்
பொருளும் நன்கு ஆராய்ந்து சாற்றும்
ஏற்றத்தில் பெரியன் எங்தம்
இனிய நற்றமிழைப் போற்றிச்
சாற்றினன், எழுத்தில பேச்சில்
தமிழுக்கு நல்ல காலம்
தோற்றிற்று என்னும் முன்னே
மறைந்தனன் சொல்லின் செல்வன்!

ஈழத்தில் எழுந்து ஞாலம் எங்கணும்
தமிழை நாட்டி
வாழவே வைத்த ஞானி
வளர்தனி நாயகபேர்
ஆழமே மிகுந்த அண்ணல் மறைந்தபின்
தமிழைக்காக்கத்
தோழன் நீ இருந்தாய் இன்று
சொல்லாமே மறைந்துவிட்டாய்!

புதுமைக்குள் புதுமை காணும் புனிதனே
தமிழுக்காக
எதனையும் ஏற்க வல்ல இதயத்தை
நின்பாற் கண்டோம்
சதி செய்தான் விதியும் இன்று
தண்டமிழ்க் கைலாசப்பேர்ப்
பதியினைப் பறித்துவிட்டான்
கதி தமிழ்க்காரோ காண்பேம்

- வித்துவான் சி. ஆறுமுகம்

## வவனியா பஸ்நிலையம்

(வவனியா)

வவனியா பஸ்நிலையம் மீண்டும் சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது.

அண்மையில் மண் போடப்பட்டு சீர்திருத்தப்பட்ட போதும் இந்த பஸ்நிலையம் மீண்டும் சேறும் சகதியுமாகக் காட்சியளிக்கின்றது. இதனால் பிரயாணிகள் பெருத்த கஷ்டத்துக்குள்ளாகின்றனர். இப்புகார் குறித்து நகரசபை நடவடிக்கை எடுக்கவுள்ளது.

## கொடிகாமத்தில்

(சாவகச்சேரி)

"இயேசுநாதரின் போதனையில் நம்பிக்கை கொண்டு வாழ்க்கையின் வழிகாட்டியாகிய காந்தி மகானின் அடிச்சுவட்டைப்பின்பற்றி அகிம்சை வழியில் நின்று அதர்மத்தை எதிர்த்து வீழ்த்துவது மக்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்."

இராணுவ முகாமில் வைக்கப்பட்டுள்ள மதகுருமார், பல்கலைக்கழக விரிவுரையாளர் ஆகியோரை விடுதலை செய்யும்படி நடந்த அடையாள உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் சாவகச்சேரி வர்த்தக சம்மேளனத் தலைவர் திரு. சி. நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினர்.

திரு சங்கரப்பிள்ளை தலைமையில் நடந்தஉண்ணாவிரதத்தில் கொடிகாமம், கச்சாய், பாலாவி, வெள்ளாம்போக்கட்டி ஆகிய இடங்களிலும் இருந்து ஆண், பெண், குழந்தைகள், முதியோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (க)

## இன்றைய பலன்

கார்த்திகை மாதம் 24ந் திகதி

வெள்ளிக்கிழமை

(10—12—82)

**மேடம்:** அன்பின் அணைப்பு உங்களைப் பரவசத்தில் ஆழ்த்தும், சாஸ்திர வழியால் கனிவான சம்பவங்கள் இடம் பெறும். வெளியிடத் தொடர்புகளிலும் நன்மையான மாற்றங்கள் உண்டு. மகிழ்ச்சிகரமான தினம்.

**இடபம்:** சிந்தையில் குழப்ப நிலை தோன்றும். மனைவியின் உடல் நிலை கவலையைத் தரலாம். செலவினங்கள் வரவிற்கு மிஞ்சியதாக இருக்கும். தெய்வ நம்பிக்கை நன்று.

**மிதுனம்:** இறைவழிபாடு மேலிடும். இதன் மூலம் இதயத்தில் அமைதியும் ஏற்படும். முதியவர் ஒருவர் தக்க சமயத்தில் உங்களுக்கு ஆதரவு தருவார். பதாவழிச் சுகமும் உண்டு.

**கடகம்:** தங்கக் குணம்மேலிடும். தக்கமதிப்பு கிடைக்கும். இனத்தவர்களுடன் தொடர்பு பெருகும். உழைப்பின் பயனும் உற்சாகமும் பிறக்கும்.

**சிங்கம்:** வசதிகள் பெருகும். வரவிலும் திருப்தி ஏற்படும். செல்வாக்குப் படைத்தவர்களின் ஆதரவு பெருகும். மக்களால் மகிழ்ச்சியும் கிடைக்கும், சகோதரவழியால் சுகம் உண்டு.

**கன்னி:** முயற்சியால் உயர்ச்சியுண்டு. உணவு விவகாரங்களில் நல்ல திருப்பங்கள்காணப்படும். வெளியிடத்தில் இருந்து நல்ல செய்தி கிடைக்கும். சுபகருமங்கள் நடைபெறும்.

**துலாம்:** பிரச்னைகள் பல வந்து குவியும். எதிலும் நல்ல முடிவை எடுக்க முடியாது திகைப்பீர்கள். ஒருவரின் உடல் நலம் பாதிக்கப்படலாம். வைத்தியச் செலவிற்கு இடமுண்டு. இறைவழிபாடு நன்மை தரும்.

**விருச்சிகம்:** குழறும் நெஞ்சத்துடன் நாளைக் கடத்துவீர்கள். எதிலும் அவசர முடிவைத் தவிர்த்துக் கொள்ளவும். உடல நலத்தில் அதிக கவனம் செலுத்துக. பிரயாணத்தைத் தவிர்ப்பது விரும்பத்தக்கது.

**தனு:** பொருளாதாரத்துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது. கொடுக்கல் வாங்கல்கள் மூலம் அதிக ஆர்வம் பிறக்கும். வசீகரப் பேச்சின்காரணமாக எதிரிகளையும் உங்கள் வசப்படுத்துவீர்கள்.

**மகரம்:** அதிக நம்பிக்கை ஆபத்தைத் தேடித்தரலாம். தன் கையே தனக்குதவி என்று செயலாற்றவும். மறைமுக எதிரிகள் விஷமத்தனங்களில் ஈடுபடுவார்கள். நிதானம் விரும்பத்தக்கது.

**கும்பம்:** புதிய நம்பிக்கையுடன் வாழ்க்கையை ஆரம்பிப்பீர்கள். தெய்வத்தின் அருள் கிடைக்கும். தங்கள் செயற்திறமைமற்றவர்களைத் திகைக்கவைக்கும். தொழிலிலும் வெற்றி உண்டு.

**மீனம்:** அறவழிகளை மனம் நாடும். கவர்ச்சிகரமான பொருட்களை விரும்புவீர்கள். வேற்றுமைகள் மறையும். உங்கள் உதவிக்கு புத்திரர்கள் விரைவர். முயற்சி முன்னேற்றம் தரும்.

சோதிடகலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை




# உன்னத தரத்தின் உயர் சுவை-
# உலகெங்கும்!

சுவிட்சர்லாந்து முதல் ஹொங்கொங் வரை, இத்தாலி முதல் மேற்கு இந்தியத் தீவுகள் வரை, உலகெங்குமுள்ள மக்களின் அபிமானம் பெற்றது இனிப்பூட்டிய மில்க்மெயிட கட்டிப் பால்

மில்க்மெயிட அதி சுத்தமானது, அதி மிருதுவானது, அதி சுவை மிக்கது-ஏனெனில் அது உடன் கறந்த பசுவின் பாலில் உங்களுக்கென்றே தயாரித்தது. அத்துடன் அது கெட்டித்த செறிவு மிகுந்து விளங்கக் காரணம், சர்வ தேச உயர் தராதர விதிகளுக்கமைய நெஸ்லே நிறுவனம் அதைத் தயாரிப்பது தான்

மில்க்மெயிட் சிக்கனமும் மிக்கது. ஏனெனில் அது முன்னரே இனிப்பூட்டியது. எனவே, கோப்பைக் கணக்கில் அதி மதுரமான தேநீர், கோப்பிப் பானங்களை நீங்களே வழங்கினாலும் உங்கள் செலவு கை மிஞ்சிப் போகாது.

மில்க்மெயிட் பாவியுங்கள் உலகெங்கும் அது மிக விரும்பப்படும் காரணத்தைக் கண்டறியுங்கள்




விலை ரூ. 11/90-397 கிராம்

**மில்க்மெயிட்** அற்புதமான இலங்கைத் தேயிலையை மேலும் அதி சுவை பெறச் செய்யும்.

HTL CN 1103

## இன்று நடக்கும் பாரதிவிழா

[கிளிநொச்சி]

இயக்கச்சி ஆதவன் விளையாட்டுக் கழகத்தினர் இன்று இயக்கச்சி கனிஷ்ட மகாவித்தியாலய அரங்கில் பாரதி விழா வெகு சிறப்பாக கொண்டாடுகின்றனர். திரு. க. து. விநாயகமூர்த்தி தலைமையில் நடை இவ்விழாவில் திரு. வி. ஆனந்தசங்கரி எம். பி உதவி அரசாங்க அதிபர் திரு எஸ் முருகவேள், வட்டாரக் கல்வி அதிகாரி திரு. அ தங்கராசா ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கின்றனர். விழாவின் சிறப்பம்சமாக இடம் பெறும் கவியரங்கில் கவிஞர்கள் டாக்டர் வேலணையூர் திரு லோகமூர்த்தி, நவபாலகோபால் வி ரி. இளங்கோபன், கண்டாவளை கவியராயர், சாள்ஸ். குணநாயகம், க. பிரபலசிங்கம் ஆகியோர் பங்கு கொள்கின்றனர்,

## "மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு ஆங்கிலம் சிறந்த சாதனம்"

(யாழ்ப்பாணம்)

"ஆங்கிலம் பிறருடன் தொடர்புகொள்ளுவதற்கு இன்றைய உலகில் மிகவும் முக்கியம். அத்துடன் மாணவரின் பல்வேறு ஆற்றல்களையும் வெளிப்படுத்துவதற்கும் சிறந்த சாதனமாகும்''

யாழ்ப்பாணக்கல்வித்திணைக்களப் பிரதமகல்வி அதிகாரி திரு. எம். எம். மன்சூர், நேற்று முன்தினம் மாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற யாழ் பிரதேச ஆரம்ப பாடசாலைகளுக்கான ஆங்கிலதினவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது கூறினர்.

இவ்விழா யாழ்ப்பாண கல்வித்திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

தொடர்ந்து உரையாற்றிய திரு மன்சூர் கூறியதாவது: 1960ம் ஆண்டு தொடக்கம் கல்வி அமைச்சு ஆங்கில, தமிழ் – சிங்கள தினங்கள் பாடசாலைகளில் கொண்டாடப்படவேண்டும்எனப் பணித்தது. இந் நற்கருமத்தினால் இன்று மொழிவளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கப்படுகிறது.

வரவேற்புரை நிகழ்த்திய யாழ் பிரதேச ஆங்கில வட்டாரக் கல்விஅதிகாரி திரு. சி. க. குலசேகரன் கூறியதாவது: "ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை இன்று மறுப்போர் எவருமில்லை. சுருங்கிவரும் இன்றைய உலகில், பல்வேறு நாட்டுமக்களிடையே தொடர்புகள் வளர்கின்றன. இத் தொடர்பை வலுப்படுத்த சிறந்தவழியாகஆங்கிலமொழி திகழ்கிறது''

போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு திரு. மன்சூர் பரிசில்களை வழங்குனர்.

ஆங்கிலசேவைக்கால ஆலோசகர் திரு.எப். மாசிலாமணியும் உரைநிகழ்த்தினர். (மா)


மனோகரா யாழ்.நகர்
தினசரி 10-30, 2-15, 4-45 7-00, 9-30
Land Turner, Ralph Bates in
Persegution
(Strictly for Adults)

ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் – சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஹலோ மிஸ்டர் ஜமீந்தார்
(கலர்)

வெஸ்லி தினசரி 6-30, 9-30 சனி.ஞாயிறு2-30
(மானிப்பாய்) கார்த்திக்—ராதா—தியாகராஜன்
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)

சாந்தி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
5-வது கடைசி வாரம்!
எம், ஜி.ஆர்–லதா
நவரத்தினம்
A.P.N. இன் வண்ணப்படம்

5-வது ஜனத்திரள்வாரம்
றீகல் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன்–ஜெயலலிதா, அசோகன்–நாகேஷ்
நான் (ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி–ஜெயலலிதா
சவாலேசமாளி

ராணி தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
(யாழ். நகர்) சிவாஜி-உஷா நந்தினி நடித்த
என்னைப்போல் ஒருவன்

வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
10—13-12-82
எம். ஜி. ஆர்.
சரோஜாதேவி
நாடோடி

ஸ்ரீதர் தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
(யாழ். நகர்)
BRUCE LEE in
THE WAY OF THE DRAGON
த வே ஒவ் த ட்றகன்
Your last chance to see a Karate film......
Your last chance to see a Bruce Lee's film.....
கராட்டி படத்தைப் பார்க்கக் கிடைத்திருக்கும் கடைசிச் சந்தர்ப்பம் இதுவே.........
புரூஸ்லீயின் திரச் செயல்களை காணக் கிடைக்கும் கடைசிச் சந்தர்ப்பம் இதுவே......


### - டெஸ்ட் கிரிக்கட் தொடர் இன்று ஆரம்பமாகிறது -

# பாகிஸ்தான் மண்ணில் கவாஸ்கருக்கு சோதனை

இந்தியக் கிரிக்கட் கோஷ்டி தனது பக்கத்து நாடான பாகிஸ்தானின் பலம் பொருந்திய கிரிக்கட் கோஷ்டியுடனன ஆறு டெஸ்ட் தொடரின் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தை இன்று பாகிஸ்தான் மண்ணில் ஆரம்பிக்கிறது.

இந்திய —பாக் யுத்தம் காரணமாக இருநாடுகளுக்குமிடையேயான உறவு நீண்டகாலமாகத் துண்டிக்கப்பட்டிருந்ததை அடுத்து 78-ம் ஆண்டு பிஷன்சிங் பேடியின் தலைமையில் முதல் தடவையாக பாகிஸ்தான் சென்ற இந்தியக் கோஷ்டி படுதோல்வியடன் திரும்பிய பின் இப்போது சுனில் கவாஸ்கர் தலைமையிலான கோஷ்டி 70 நாள் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்கிறது.

சாதனை மேல் சாதனையாகக் குவித்துக்கொண்டிருக்கும் கவாஸ்கரின் தலைமைக்கு இந்த டெஸ்ட் தொடர் பெரும் சோதனையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

உலகின் அதிவேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரும் சிறந்த துடுப்படி வீரருமான இம்ரான் ஹரன் தலைமையிலான பாகிஸ்தான் கோஷ்டி கடந்த ஜூன், ஜூலை மாதங்களில் இங்கிலாந்து மண்ணில் இங்கிலாந்து கோஷடியுடன் அபாரமாக ஆடியதையும் அண்மையில் பாகிஸ்தான் உலகின் பலம் பொருந்திய கோஷ்டிகளில் ஒன்றான ஆஸ்திரேலியாவை திணறடிக்கச் செய்து அத் தொடரில் 3-0 டெஸ்ட்களால் வெற்றி பெற்றதையும் இந்திய வீரர்கள் இலகுவில் மறந்து விடமுடியாது.

**- காந்தன் -**

முதல்தர ஆட்டங்களில் 99 செஞ்சுரிகளை விளாசித்தள்ளிவிட்டு இத்தொடரில் 100வது செஞ்சுரியை எதிர்பார்த்திருக்கும் பாக் முன்னணி வீரரான ஸாஹிர் அப்பாஸ், நீண்டகால இடைவேளைக்குப்பின் தமது திறமையை வெளிக்காட்டிக் கொண்டிருக்கும் மோஷின் ஹான் அபார துடுப்படி வீரரான ஜலாட்மியன்டாட், அண்மையில் தமது சுழல்பந்து வீச்சினால் இங்கிலாந்து, ஆஸ்திரேலிய வீரர்களைக் கதிகலங்கச்செய்த அப்துல்காதிர் வேகப்பந்து வீச்சுவீரர்கள் தாஹிர் நாக்காஸ், சிக்கந்தர் பக்த் ஆகியோர் அடங்கிய கோஷ்டியே இந்திய வீரர்களின் திறமைக்கு சவாலாக இருக்கின்றனர்.

பாகிஸ்தான் 'பிச்'சும் வேகப்பந்து வீச்சாளருக்கே சாதகமாக இருப்பதாக பத்திரிகைகள் கூறுகின்றன.

இந்த டெஸ்ட்தொடர் பற்றி கருத்துத்தெரிவித்த பாக் காப்டன் இம்ரான்கான், இத்தொடரில் தமது கோஷ்டியே நிச்சயம் வெற்றிபெறும் என தாம் நம்புவதாகப் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார்

இந்திய வீரர்களைப் பார்ப்போம்

78ல் பாக் சென்று 2-0 ஆட்டங்களால் தோல்வியடைந்த இந்திய கோஷ்டியிலும் 79—80 இந்தியா வந்த பாக் கோஷ்டியுடன் ஆடிய கோஷ்டியிலும் [இத்தொடரில் 2—0 ஆட்டங்களால் இந்தியாவுக்குவெற்றி] அங்கம்வகித்த கவாஸ்கர், விஸ்வநாத், வெங்சக்கார், கபில்தேவ் உட்பட ஏழு வீரர்கள் இம்முறையும் இந்திய கோஷ்டியில் அங்கம்வகிக்கின்றனர்.

அனுபவம்மிக்க வீரர்களுடன் 16 வயதான தமிழ் நாட்டு கல்லூரி மாணவன் எல். சிவராமகிருஷ்ணன், பதினேழு வயதான மணிந்தர்சிங், ரவிசாஸ்திரி ஸ்ரீகாந்த் ஆகியோரும் இந்தியக் கோஷ்டியுடன் சென்றுள்ளனர்.

இதுவரை 79 டெஸ்ட்களில் ஆடிய சுனில் கவாஸ்கர், 35 டெஸ்ட்களுக்குத் தலைமை தாங்கி 8 வெற்றிகளையும் 3 தோல்விகளையும் சந்தித்திருக்கிறார்கள். பல சாதனைகளை முறியடித்து பாகிஸ்தானுடன் 78-ம் ஆண்டுத் தொடரில் 3 டெஸ்ட்களில் 3 செஞ்சுரிகளை அடித்து சாதனை புரிந்தது குறிப்பிடத்தக்கது 6,951 ஓட்டங்களைப் பெற்றுள்ள இவர் 25 செஞ்சுரிகளையும் அடித்துள்ளார்.

உலகின் தலைசிறந்த ஆரம்ப துடுப்படிவீரரான இவருக்கு உகந்த ஜோடி ஒன்றை தேட முடியாத நிலையில் அருண்லால், ஸ்ரீகாந்த் ஆகிய இருவரும் பாகிஸ்தான் சென்றுள்ளனர் இப்பிரச்சினைக்கு இத் இத்தொடர் முற்றுப்புள்ளி வைக்கும் என்றே கிரிக்கட் ரசிகர்கள் நம்புகிறார்கள்.

பாக்மண்ணில் கிரிக்கட் டெஸ்ட் சரித்திரத்தை ஆரம்பித்து இன்றுவரை 2 ஆயிரத்துக்கும் அதிகமான ஓட்டங்களை அடித்ததோடு, 150க்கும் மேற்பட்ட விக்கட்டுகளையும் கைப்பற்றிய நம்பிக்கை நட்சத்திரமான கபில்தேவ் இத் தொடரில் நன்கு பிரகாசிப்பார் என்பதும் கிரிக்கட் ரசிகர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

## சமாதான சபை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கிராமோதய சபைப்பகுதியில் பொதுமக்களிடையே ஏற்படும் சிறு சிறு சச்சரவுகளையும், தகராறுகளையும் சமாதான முறையில் தீர்த்துவைக்கும் பொருட்டு சமாதானசபைஒன்று பண்டத்தரிப்பு கிராமோதயசபையினால் அமைக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் சபைத்தலைவி திருமதி பேர்ஸி அத்தனாசியார் தலைமையில் நடைபெற்ற கிராமோதயசபையின் விசேட பொதுக்கூட்டத்தில் இத்தெரிவு நடைபெற்றது. இளைப்பாறிய அரசு உத்தியோகத்தர் திரு வி துரையப்பா இச்சபையின்தலைவராகவும், பண்டத்தரிப்பு கிராம சேவை அலுவலர் திரு. எஸ். சுந்தரமூர்த்தி செயலாளராகவும் கடமையாற்றுவார்கள்.

## நயினாதீவில் உண்ணாவிரதம்

(நயினாதீவு

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் மதகுருமார், பல்கலைக்கழக விரிவுரையாளர் உட்பட அனைவரையும் விடுதலை செய்யக்கோரி நயினாதீவு ஸ்ரீ முருகன் கோவிலில் முன்பாக ஒருநாள் உண்ணாவிரதம் அநுஷ்டிக்கப்பட்டது.

நயினாதீவு வடக்கு கிராமோதய சபைத்தலைவர் திரு நா. சிவராசசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் உண்ணாவிரத வைபவத்தில் பல்கலைக்கழக மாணவர்களுட்படப் பலர் பங்குபற்றினர். உண்ணாவிரதக்காரர் பல்வேறுபட்ட சுலோகங்களைத் தாங்கியிருந்தனர். (அ)

## யாழ். மாவட்டத்தில் நீதிபதிகள் ஜனவரி முதல் இடமாற்றம்!

(மாவிட்டபுரம்)

மல்லாகம் ஆரம்பநீதிமன்ற நீதிபதி திரு ஜே. கணபதிப்பிள்ளை முல்லைத்தீவு ஆரம்ப நீதிமன்றத்திற்கு ஜனவரி முதல் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்திற்கு மன்னார் ஆரம்ப நீதிமன்ற நீதிபதி திரு வி. சிதம்பரநாதன் இடமாற்றம்பெற்று வருகிறார்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. எஸ் இராஜநாதன் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியாக இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

வேலணை ஆரம்பநீதிமன்ற நீதிபதி திரு. விசுவநாதன் வாழைச்சேனை ஆரம்பநீதிமன்றத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியாகவிருந்த திரு. பி. பாலவடிவேல் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதியாக இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி நீதவானாக இருந்த திரு. வி. ஜெகசோதி யாழ் நீதவான் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றம்பெறுகிறார். யாழ் நீதவான் திரு. ரி யோகநாதன் கிளிநொச்சிக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு ஆரம்ப நீதிமன்ற நீதிபதி திரு. யோகசிகாமணி வேலணை ஆரம்ப நீதிமன்றத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

யாழ மாவட்ட பதில்நீதிபதியாகவிருந்த திரு எம். டி. யேசுரத்தினம் நிரந்தர மாவட்ட நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். [க]

## மீண்டும் ஒரு மாணவி தெரிவு

[சாவகச்சேரி

பளை மகாவித்தியாலயத்திலிருந்து ஏற்கனவே செல்வி சாந்தநாயகி பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அவரைத் தொடர்ந்து மீண்டும் செல்வி மல்லிகாதேவி பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். [க]

## சிறுகதைப் போட்டி

(கொழும்பு)

கொழும்பு நீர்ப்பாசனத் திணைக்கள தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் இவ்வாண்டும் ஒரு சிறுகதைப்போட்டியை நடத்தத் தீர்மானித்துள்ளது. கிடைக்கப்பெறும் சிறுகதைகளுள் தரமான மூன்று சிறுகதைகளுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளது. போட்டிக்குரிய கதைகளை இம் மாதம் 25-ந் திகதிக்கு முன் அனுப்பவேண்டுமென மேற்படி தமிழ்ப் பண்பாட்டுக் கழகச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# மகாத்மா காந்திஜியின் வழியில் கிராம ராஜ்யத்தைஉருவாக்கவே நாம்பாடுபடுகிறேம்

## வவனியாவில் பிரதமர் 'பிரேமா'

[த. விவேகராசா]

இந்தியாவில் மகாத்மா காந்தி எந்த அடிப்படையில் கிராம எழுச்சி மூலம் கிராமங்களை உருவாக்கினரோ அதே அடிப்படையில் நாமும் இலங்கையிலுள்ள சகல கிராமசபை பகுதிகளிலும் கிராம ராஜ்யங்களை உருவாக்க முன்வந்துள்ளோம்.

இவ்வாறு பிரதம மந்திரி திரு. ஆர் பிரேமதாசா வவனியாவில் கூறினார்.

ஹெலிகொப்டர் மூலம் வவனியாவுக்கு வந்து சேர்ந்த பிரதமரை ஐ. தே. கட்சி வவனியா அமைப்பாளர் கா. த. குலேந்திரன், மாவட்ட அமைச்சர் திரு ஜி. டி. மகிந்தசோம மன்னார் மாவட்ட அமைச்சர் ஜனுப் மஹ்ரூப், அரசாங்க அதிபர் திரு கே. கி. லோகேஸ்வரன் ஆகியோர் சம்பிரதாய முறைப்படி வெற்றிலை கொடுத்தும் மலர்மாலை அணிவித்தும் வரவேற்றனர்.

வவனியா பாவக்குளம் மைதானத்தில் பொதுசன வாக்கெடுப்புத் தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் பேசினார். திரு குலேந்திரன் தலைமையில் கூட்டம் நடந்தது.

திரு. பிரேமதாசா தமது உரையில் கூறியதாவது:

''இந்தநாட்டின் மன்னர்களும் நீங்கள்தான் தலைவர்களும் நீங்கள் தான் இந்த நாட்டில் கிராமராஜ்யம் உருவாக எதிர்வரும் 22ம் திகதி விளக்கு சின்னத்துக்கே வாக்களியுங்கள். இதைத்தான் நானும் ஜனுதிபதி அவர்களும் உங்களிடம் கேட்கின்றேம். எமக்கு சாதிமத இன வேற்றுமை கிடையாது. கிராம மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவே பாடுபடுகின்றேம். மக்கள் அனைவரும் பொதுவாக அறிவார்கள் எல்லார்வாழ்விலும் ஒளி ஏற்றப்பட வேண்டும் இதனுல்தான் ஒளிவிளக்குடன் உங்கள் முன்வந்துள்ளோம். சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியில் காலம் சென்ற எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் வலது கையாகவும் சிறிமா அம்மையார் ஆட்சியில் அதிமுக்கிய பொறுப்பு வாய்ந்த அமைச்சர் பதவிகளை வகித்த திரு. கலுகல்ல இன்று எம்முடன் இணைந்துள்ளார். சென்ற ஜனுதிபதி தேர்தலில் எம்மை எதிர்த்து பிரசாரம் செய்த மைத்திரிபால சேனநாயக்கா கூட எம்மை ஆதரிக்க முற்பட்டுள்ளார்.

ஆறு வருடங்களுக்குத் தொடர்ந்து பதவி வகிக்க ஜனுதிபதி மக்களிடம் அனுமதி கோரினார். இதில் வெற்றி கண்டுள்ளோம். மக்களுக்கு நன்றி கூறுவது எமது கடமையாகும். இந்த நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்ந்தும் முன்னேற வேண்டுமானுல் ஜனுதிபதி தனக்கு ஏற்ற பாராளுமன்றத்தை அமைக்கவே மக்கள் அனுமதியைக்கோரி இங்கு வாக்கெடுப்பை நடத்துகின்றேம். சென்ற முறை ஜனுதிபதி தேர்தலில் யானை, கை, மணி என்ற சின்னங்கள் இருந்தன.

இந்தத் தேர்தலில் அவை ஒன்றும் இல்லை. யானையை ஒய்வெடுக்கச் சொல்லிவிட்டு விளக்குக்கு வாக்களியுங்கள் என்று கேட்கின்றேம். பொதுவாக விளக்குச் சின்னத்துடனே நாம் வாக்குக் கேட்கிறேம். நாம் வயல்களும், குளங்களும் அபிவிருத்தித் திட்டங்களும செயல்படவேண்டுமாகில் 'ஆம்' என்று சொல்லும் விளக்குக்கு நேரே வாக்களியுங்கள். உணவு தேவை, விவசாயம் செய்ய நீர் தேவை, என்று நினைத்தால் விளக்குக்கு நேரே வாக்களியுங்கள். உங்கள் வாழ்க்கை வளம்பெற வேண்டுமானுல் விளக்குக்கு வாக்களியுங்கள்.

சிறிமாவோ அம்மையார் 7 வருட ஆட்சியில் நீங்கள்பட்ட துயரம் எமக்குத் தெரியும். அந்த ஆட்சியில் ஒன்றுமே இருக்கவில்லை.

சீனிஇல்லை, பாணில்லை, மாவில்லை, சோறுஇல்லை, ஆட்கள்கூட இல்லாது காணப்பட்டது. மக்கள் துணிமணி இல்லாமல் கஷ்டப்பட்டார்கள். இன்று யாரும் வெளியில் சென்று பணம் சம்பாதிக்கும் நிலை உள்ளது. இந்நாட்டுத் தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்களின் வாழ்வு மலரவேண்டுமானுல் 'ஆம்' என்று விளக்குக்கு நேரே போடுங்கள்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

மீளவித்து, புனரப்பிக்கப்பட்டுள்ள யாழ். பொதுசன நூல் நிலையத்தின் வடபாகத்தையும் அதில், இடம்பெறும் 'உடனுதவு' நூலகத்தையும் யாழ் மாநகராட்சி மன்ற முதல்வர் திரு. ராஜா விசுவநாதன் வைபவரீதியாக இன்று பிற்பகல் திறந்துவைப்பார். [மா]


★ வெளிநாட்டுப் பயணமா?
யாழ்ப்பாணத்திலேயே
குறைந்த கட்டணத்தில்
எந்த நாட்டிற்கும்
விரும்பிய விமானத்தில்
செல்ல
★விமான டிக்கட்டுகள்
★பிரயாண காசோலைகள்
(AMERICAN EXPRESS TRAVELLER CHEQUES)
வங்கியில் அறிவிடப்படும் அதே கட்டணத்தில் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்
மக்கினென்
டிறவல்ஸ் லிமிட்.
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
த. பெ. எண் 92, தொலைபேசி: 24154


## தேவன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிட்டார்.

ஈழத்தின் பிரபல எழுத்தாளரும், விமர்சகரும், பேச்சாளருமான யாழ். இந்துக் கல்லூரியின் முன்னைநாள் ஆசிரியர் இளையதம்பி மகாதேவாவின் ['தேவன்'] இறுதிச் சடங்கில் ஏராளமான ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், அதிபர்கள், அரசியல்வாதிகள் மற்றும் பலதுறைகளைச் சேர்ந்தோரும் கலந்துகொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்கள்.

யாழ். மாநகர முதல்வர் திரு இராஜா விசுவநாதன்; ''தேவன் ஒரு சிறந்த சமூகத் தொண்டனுக விளங்கி எவ்வேளையிலும், எந்த நிலையிலும் யாருக்கும் எந்த உதவி யானுலும் மனங்கோனுது செய்த நல்லவர்'' என்றார்.

யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. பி. எஸ் குமாரசாமி 'தமிழ்மொழி ஆக்கத்திறன் மிக்கவரை இழந்து விட்டது என்றும், தேவனுக்குத் தெரியாத துறையும் இல்லை' என்றும் கூறினர்.

# பரு. நகராளுமன்றம் ஜனுதிபதிக்குக் கடிதம்

[புலோலி]

பயங்கரவாதத் தடைச் சட்டம் என்றபோர்வையில் பல மதகுருமார்களையும், விரிவுரையாளர்களையும், மாணவர்களையும், பெண்களையும் இராணுவத்தினர் கைதுசெய்து இராணுவ முகாம்களில் தடுத்து வைத்து நீதிக்கும், மனித உரிமைக்கும் அப்பாற்பட்ட முறையில் துன்புறுத்தப்படுவதாகக் கண்டித்து பருத்தித்துறை நகராளுமன்றம் ஜனுதிபதி ஜே ஆர். ஜயவர்த்தனுவுக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

பருத்தித்துறை நகராளுமன்றக்கூட்டம் நகரமுதல்வா சட்டத்தரணி எம். வேலும்மயிலும் தலைமையில் நடைபெற்ற போது உறுப்பினர் திரு. ஏ. அருளானந்தம், பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற போர்வையில் மதகுருமார்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள். பெண்களை இராணுவத்தினர் கைது செய்து நீதிக்குசிம், மனித உரிமைக்கும் அப்பாற்பட்ட முறையில் துன்புறுத்திக் கொண்டிருப்பதைக் கண்டிப்பதுடன், அவர்களை உடனடியாக நீதிவிசாரணைக்குட்படுத்துமாறும், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறும் அரசாங்கத்தைக்கோர வேண்டுமென்றும், இத்தீர்மானத்தின் பிரதிகளை ஜனுதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனு, பிரதமர் ஆர். பிரேமதாசா நீதியமைச்சர் திரு. நிஸங்க விஜயரத்தினு, இலங்கை அதிமேற்றிராணியார், யாழ்.மேற்றிராணியார் ஆகியோருக்கும் அனுப்பிவைக்க வேண்டுமென பிரேரணை கொண்டு வந்தார். இப்பிரேரணையை நகர முதல்வர் சட்டத்தரணி எம். வேலும்மயிலும் ஆமோதித்தார்.

இதனைத்தொடர்ந்து, இது சம்பந்தமான கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (அ)

## மதகுருமார்களை விடுதலை செய்யக் கோரிக்கை

[வவனியா]

ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருக்கும், மதகுருமார்களையும், பல்கலைக்கழக விரிவுரையாளர் தம்பதிகளையும் விடுதலை செய்ய வேண்டுமென்று ஜனுதிபதியைக் கோரும் தீர்மானம் வவனியா சுத்தானந்த இந்து இளைஞர் மன்றக்குழுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

மன்றத் தலைவர் திரு. கா. லோகசிங்கம் தலைமையில் நடந்த கூட்டத்திலேயே மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறும் அரசை கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்ற செயலகத்திலே இந்த கூட்டம் நடந்தது. [க]

## ரூபவாஹினியில் 'அமிர்' வானெலியில் 'சிவா'

(கொழும்பு)

சர்வஜன வாக்கெடுப்பை எதிர்த்து எதிர்க்கட்சித்தலைவரும், காங்கேசன்துறை எம். பியுமான திரு. ஏ. அமிர்தலிங்கம், இம்மாதம் 14-ம் திகதி இரவு 7 30 மணிமுதல் 7-45 மணி வரை 'ரூபவாஹினியில்' உரை நிகழ்த்துவார். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், நல்லூர் எம். பி. யுமான திரு. எம். சிவசிதம்பரம் இம்மாதம் 16-ம் திகதி இரவு 9-30 மணி முதல் 9-45 மணிவரை வானெலியில் உரை நிகழ்த்துவார். இ

## யாழ். இந்து ஆரம்பபாடசாலை பரிசளிப்புவிழா

[யாழ்ப்பாணம்]

யாழ். இந்து ஆரம்பபாடசாலை சமூகக் களியாட்டுவிழா பரிசளிப்புவிழா நேற்று சிறப்பாக நடைபெற்றது. யாழ். பிரதம கல்வியதிகாரி ஜனுப் எம். எம். மன்சூர் பிரதமவிருந்தினராகவும், பாடசாலை அபிவிருத்திசபை உபதலைவர் திரு. சு. சிவகுரு கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்,

விழாவில் பாட்டு, ஆங்கில, தமிழ் பேச்சுக்கள், நடனம், கோலாட்டம் என்று மாணவ மாணவிகளின் பல்வேறுநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

நல்லூர் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி ஆசியுரைவழங்கினர். திரு. சு. சிவகுரு பரிசு வழங்கினர்,

## சம்பளப்பணத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் இந்த முயற்சியை ஆசிரியர் சமூகம் ஒன்றுபட்டு எதிர்க்கவேண்டுமென்று கூட்டாகவேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அந்த வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது –

ஆசிரியர்கள் தமது வேதனத்தைப் பாடசாலையில் பணமாகப் பெறவேண்டும் என்பதனை வற்புறுத்தும் நாம், அதிபர்கள் நலன் காப்பாற்றப் படவேண்டும் என்பதில் சம அக்கறையுடையவர்களாகவும் உள்ளோம் அதிபர்கள்' ஆசிரியர்களின் சம்பளப் பணத்தை வங்கியில் அல்லது தபால் நிலையத்தில் சென்று மொத்தமாகப் பெறுவதை நாம் விரும்பவில்லை. ஒவ்வொரு பாடசாலைக்கும் உரிய சம்பளப்பணத்தை கல்வித் திணைக்களம் அவ்வப் பாடசாலைக்கு எடுத்து வந்து கொடுக்கவேண்டும். என்னும் கோரிக்கையை அதிபர்கள்முன் வைத்தால் அது கைகூட உழைப்பதற்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கக் காத்திருக்கின்றது. இக் கோரிக்கை புதுமையானது அல்லபுகையிரதத் திணைக்களம் வேறு போன்ற திணைக்களங்களில் இத்திட்டம் நடைமுறையில் உள்ளது. (க)

## சில்லாலையில்...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

கள். பின்னர் சாரதியும், கண்டக்டரும், பொதுமக்களும் சேர்ந்து பஸ்ஸை முழுமையாக எரியவிடாது தீயை அணைத்ததினுல் அதுமுழுமையாக எரியாது காப்பாறறப் பட்டது.

இதுதொடர்பாக காங்கேசன்துறை பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர், (வெ)

## 4 மாடிக் கட்டடம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களாகப். பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது ஏற்கனவே 1982ம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் 50லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணம் வேறு திட்டங்கள் எதற்கும் பயன்படுத்துவதற்கு எடுக்கப்படாமல் அப்படியே இருப்பதாக அபிவிருத்தி சபைத்தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும் 1983ம்ஆண்டுரூபா1 கோடிஒதுக்கப்பட்டுள்ளதுடன் 1984லிலும் ஒருகோடி ரூபா ஒதுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ். ஆஸ்பத்திரியின் வடக்குப்பக்கமாக இந்த நான்குமாடிக்கட்டடம் நிறுவப்படும். (மா)


காணவில்லை
செ. சரவணமுத்து
பன்னலை, தெல்லிப்பழை செல்லையா சரவணமுத்து சித்தசுவாதீனமற்ற நிலையில் 6-ந் தேதி தொடக்கம் காணவில்லை. வெள்ளை வேட்டி, 'T' சேட், சால்வை அணிந்திருந்தார். அவர் 5' 3'' உயரமும், கருமை நிறமும், தலைமயிர் கட்டையாக வெட்டியும், நடுத்தலை வழுக்கையும், 76 வயதினருமாவார். எந்நேரமும் பல்லை அராத்தியபடியே யிருப்பார் அவரது பிறப்பு நாவற்குழி அவரைக்கண்டால் கீழ்க்காணும் விலாசத்துக்கு தகவல்கொடுக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
சுப்பிரமணியசுவாமி
விநாயகரத்தினம்
5408 ''புதுவீடு'' பன்னலை, தெல்லிப்பழை.


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre Q.B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126,